மலர்-2 இதழ்-40 ஏப்ரல் 16-30 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



www.aanmeegamalar.com

## காசி காலபைரவருக்கு சமமான தமிழகத்து

# தகட்டூர் பைரவர்

## கடன்பிரச்சனை தீர்க்கவும், லட்சுமி கடாட்சம் பெறவும் அருள்புரியும்

# தோரண கணபதி



இடத்திற்கேற்றபடி அமர்ந்தருளும் ஆனைமுகனைப் பற்றி 'ஆலயமும் கணபதி அம்சங்களும்' என்ற விதிகளின்படி, சிவாலயங்களில் அம்மன் சந்நிதானத்தின் பக்கவாட்டிலும் முருகன் சந்நதி முகப்புகளிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் கணபதி மூர்த்தங்கள், சக்தி வாய்ந்தவை. இந்த மூர்த்தங்களில் தோரண வாயில்களுக்கு நேராக அமர்ந்திருப்பவர் தோரண கணபதி எனப்படுகிறார்.

தோரண கணபதியின் அருட்தன்மை சக்தி தேவி தனியாகக் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்களில் தோரண வாயில் என்ற அமைப்பு உள்ளது.

அதனுள் பிரவேசிக்கும்போது பலிபீடத்திற்கு அருகில் வலப்பாகத்தின் மேகலையில் ஸ்ரீதோரண கணபதியை பிரதிஷ்டை செய்திருப்பார்கள். அனைத்து வகையான கணபதி மூர்த்தங்களுக்கும் இல்லாத ஒரு சிறப்பு இந்தத் தோரண கணபதிக்கு இருக்கிறது. ஜடாமகுடமும் கழுத்தில் ருத்ராட்ச மாலையும் வலக்கரத்தில் அங்குசமும் இடது மேற்கரத்தில் பாசமும், இடது கீழ்க்கரத்தில் மோதகமும் வலக்கரத்தில் தந்தமும் வைத்துக்கொண்டு வலக்கையில் உள்ள தந்தத்தைப் பயன்படுத்தி தன்னை வணங்குவோர் வாழ்வில் உள்ள கடன் என்கின்ற ருணத்தைத் தீர்த்து அருள் செய்கிறார் என்று சிவாகமத் துதிகள் சொல்கின்றன.

மூல ஆலயத்திலிருந்து நோக்கும்போது இவர் அமர்வது பிரம்ம ஸ்தானமாக அமைவதால் கடனைத் தீர்ப்பதில் இவர் கறாராக இருக்கிறார். எப்போதுமே வலம்புரி கணபதியாக இருப்பவர்; அதிக சாந்நித்தியம் உடையவர். பத்ம பீடம் என்கிற தாமரை பீடத்தில் அமர்ந்தவராய் அதிர்ஷ்டம் மற்றும் லட்சுமி கடாட்சத்தை அருளும் சக்தி கொண் டவர் இவர். கோஷ்டங்களை ஒட்டிய மேகலைப் பகுதியிலும் தோரண வாயிலுக்கு எதிராகவும் அமரும் கணபதிக்கு இந்த விசேட சக்தி உள்ளதால், அத் தலங்களுக்குச் சென்று வணங்கினால் பலனும் கிடைத்து விடுகிறது.

பிள்ளையார்பட்டி, மயிலாடுதுறை, வாரணாசி ஆகிய இடங்களிலும், சிருங்கேரி சாரதா பீடத்துடன் கூடிய சாரதாம்பாள் சந்நதியிலும் தோரண கணேசர் அமர்ந்துள்ளார். கடன் தீர்க்கும் கணபதி வழிபாடு மனிதர்களாகப் பிறந்தவர்கள் தேவகடன், பித்ருகடன், மானுடக் கடன்களைத் தீர்ப்பதில் கவனத்துடன் இருக்க வேண்டும். மானுட கடனைத் தீர்க்கக் கணபதி வழிபாடு உகந்தது. ருணம் என்ற கடனைத் தீர்க்காதுவிட்டால் நம் மனமும், வாழும் காலமும் ரணமாகிவிடக்கூடும். இரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமல் நலம் தரவல்லது இந்த கணபதி வழிபாடு.

தோரண கணபதி சந்நதிக்கு செவ்வாய், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏதேனும் ஒருநாள் என்று ஆறு வாரங்கள் சென்று கணபதியின் மேகலை முன்பாக மூன்று நெய்தீபங்கள் ஏற்றி முப்பழங்களாக மாதுளை, மா, கொய்யா இவற்றை (தோரண கணபதிக்கு பிடித்த பழங்கள்) வைத்து அறுகம்புல்லைச் சாற்றி அர்ச்சனை செய்ய வேண்டும். பிறகு தோரண கணபதி மூல மந்திரத்தை 12 முறை சொல்லி தோப்புக்கரணம் செய்து ஆத்ம பிரதட்சிணமும் (தன்னையே சுற்றுதல்) செய்து நமஸ்கரித்தல் வேண்டும்.

''ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லாம் க்லௌம் கம்
தோரண கணபதியே சர்வகார்ய கர்த்தாய,
சகல சித்திகராய, ஸர்வஜன வசீகரணாய,
ருணமோசன வ ல்லபாய, ஹ்ரீம் கம்
கணபதயே ஸ்வாஹா''

என்றும், தமிழில் ஒரு விசேடப் பாடலான தோரண கணபதி துதியையும் கூறவேண்டும்:

சக்தியின் மைந்தனாய்ச் சித்திகள் சேர்த்திடும்
முக்தியின் பொருள் சொன்ன மூத்தக்
கரிமுகவாய்
காரணனே புகழ்ப்பொருளே கடன்தீர் வீரனே!
தோரண கணபதயே! தோன்றிடுக என்
கண்முன்னே!



வாங்கிய கடனை அடைக்க இயலாமல் அவஸ்தைபடுவோரும், கொடுத்த கடனைத் திரும்பப் பெற முடியாமல் அல்லல்படுவோரும் முதலுக்கு மோசம் இன்றி பணம் திரும்ப வந்தால் போதும் என்று நினைப்பவர்களும், இந்த விசேட கணபதிப் பெருமானை வழிபட்டுப் பலன் அடைய முடியும். நமது பூஜையால் மகிழ்ச்சி அடையும் தோரண வாயில் கணபதி தன்னுடைய எழுத்தாணிபோல் உள்ள தந்தத்தால் நம்மை நெருக்குகிற கடன் தீரும்படி தீர்ப்பு எழுதிவிடுவார் என்பது நம்பிக்கை.

சிறிதாகவோ, பெரிதா கடன் உள்ளவர்கள் சுக்கில சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, மற்றும் செவ்வாய்க்கிழமை அன்று காலை, மாலை இருவேளைகளிலும் ருணவிமோசனம் தரும் தோரண கணபதி முன்பாக கூட்டாக யக்ஞம் செய்து வழிபடலாம். ரட்சைகள் செய்தும் கையில் கட்டிக் கொள்ளலாம்.

ருணவிமோசன அக்னி வழிபாடு முறையாக கல்ப விதியின்படி 32 வகையான யாகக் கூட்டுப் பொருட்களால் தோரண கணபதி முன் யக்ஞம் செய்தல் வேண்டும். இதை ஆறு வாரங்களோ, ஆறு சதுர்த்தி திதியிலோ செய்யவேண்டும்.

– ஸ்ரீபதி



# பலவிதமான பிரச்சனையை தீர்க்க உதவும் பரிகாரங்கள்

எந்த விதமான பிரச்சனைகள், கஷ்டங்களையும் போக்கும் எளிய, விரைவில் பலன் தரக்கூடிய பரிகாரங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை பார்க்கலாம்.

❖ கெட்ட எண்ணங்களை, குரூர சிந்தனைகளை திசை திருப்புவதற்கு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியை வரவேற்பறையில் அல்லது வீட்டின் உள்வாசலில் வைக்கலாம். மீன்தொட்டி வைத்து அதில் கருப்பு, சிகப்பு மீன்களை வளர்க்கலாம். வாசலில் கண் திருஷ்டி கணபதி படத்தையும் மாட்டி வைக்கலாம்.

❖ ஆரத்தி எடுக்கும்போது பயன்படுத்தப்படும் குங்குமம் கலந்த நீர், வெற்றிலை மீது எரியும் கற்பூரம் ஆகியவற்றுக்கு தீய சக்திகளை (கண்திருஷ்டி) விரட்டும் ஆற்றல் உண்டு.

❖ வாழை மரத்தை வாசலில் கட்டுவார்கள். இதற்கு காரணம் வாழைக்கு திருஷ்டி தோஷங்களை ஈர்த்துக் கொள்ளும் குணம் உண்டு என்பதுதான்.

❖ வாசலில் கற்றாழை, சப்பாத்தி கள்ளி, முள் அதிகம் உள்ள செடிகள், மஞ்சள் ரோஜா செடி ஆகியவற்றை வளர்க்கலாம். ஆகாச கருடன் என்று ஒரு வகை கிழங்கு உள்ளது. அதை வாங்கி மஞ்சள், சந்தனம், குங்குமம் வைத்து கருப்பு கம்பளி கயிற்றில் கட்டி வீட்டின் வாசலில் தொங்க விடலாம்.

❖ வாரம் ஒருமுறை கல் உப்பை குளிக்கும் தண்ணீரில் கலந்து குளித்து வர திருஷ்டியால் ஏற்படும் உடல் அசதி, சோம்பல் நீங்கும். குறிப்பாக அவரவர் பிறந்த கிழமை அல்லது செவ்வாய்க்கிழமையில் இவ்வாறு குளிக்க லாம்.

❖ வியாபாரத் தலங்களில் திருஷ்டி நீங்க எலுமிச்சம்பழத்தை அறுத்து ஒரு பகுதியில் குங்குமத்தை தடவியும், மற்றொரு பகுதியில் மஞ்சள் பொடியைத் தடவியும் வைக்கலாம். இதை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை செய்வது நலம் தரும். பழத்தை மாற்றும்போது முதலில் வைத்த பழத்தை மூன்று முறை கடையை சுற்றி தெருவில் வீசிவிடவும்.

❖ அமாவாசை, பவுர்ணமி, அஷ்டமி, நவமி போன்ற நாட்களில் காலை, மாலை இருவேளையும் சாம்பிராணி பொடியுடன், கருவேலம்பட்டை பொடி, வெண் கடுகுத்தூள் ஆகியவற்றை கலந்து வீடு, கடை அலுவலகத்தில் புகை காட்ட திருஷ்டியும், தீய சக்திகளும் வெளியேறும்.

❖ முடக்கற்றான், பச்சை கற்பூரம், கஸ்தூரி மஞ்சள், ஜவ்வாது, ஆகியவைகளைக் சேர்த்து அரைத்து அந்தப் பொடியை பசு கோமியத்தில் கரைத்து வீட்டிலோ, வியாபார ஸ்தலத்திலோ, தெளிக்க தீய சத்திகள், கண் திருஷ்டி, நீங்கி செல்வ செழிப்பு பெறலாம்.

❖ கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணெயையும், தன் குலத்தை காக்கும் குலதெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்ணையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சனைகள் விலகும். நம்முடைய முன்னேற்றம் தேங்காமல் விருத்தியாகும்.

❖ வளர்பிறையில் வரும் செவ்வாய், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கடற்கரைக்குச் சென்று கடல் நீரை எடுத்து வந்து அதில் மஞ்சள் பொடியை கலந்து கடை, அலுவலகம், வீடு ஆகியவற்றில் தெளிப்பது சிறந்த பரிகாரம். கடல் தண்ணீரில் குளித்தால் உடலில் இருக்கும் அந்த ஏழு சக்கரங்களும் பலம் பெறும்.



# தெரியாமல் சொன்னாலும் பலன்

தெரிந்தோ, தெரியாமலோ கடவுளின் பெயரை எப்படி சொன்னாலும் பலன் கிடைக்கும் என்கிறார்கள் அருளாளர்கள். உதாரணமாக, ‘‘ஐயா வந்தாரா...தெரியுமா?’’ என்று ஒருவரிடம் கேட்டால்,’’அவர் வந்தாராம், நடந்ததைக் கேட்டாராம். கொஞ்ச நேரம் காத்திருந்தாராம். அப்புறம் சாப்பிட்டாராம், கிளம்பிட்டாராம்‘’ என்று பதில் சொல்வதாக வைத்துக் கொள்வோம். இப்படி வார்த்தைக்கு வார்த்தை ‘ராம்‘ என்றதால் சொன்னவர், கேட்டவர் இருவருக்கும் ராம பக்தரான ஆஞ்சநேயரின் அருள் கிடைக்கும் என்கிறார் வாரியார்.

தொகுப்பு: மூ.சக்திவேல்.
Cell: 9787576858

# திலகமிடும் விரல்களும் பலன்களும்

உடலில் உள்ள மின்காந்த சக்தி, புருவங்களின் நடுவில் விசேஷமாக வெளிப்படுகிறது. இந்த இடத்தை ‘ஞானக்கண்’ ‘ஆக்ஞா சக்கர ஸ்தானம்‘ என குறிப்பிடுவர். அதை தூண்டி விடுவதற்காக சந்தனம், குங்குமத்தை திலகமாக நாம் இடுகிறோம். ‘திலம்‘ என்பது எள்ளை குறிக்கும். திலகம் என்பதற்கு ‘எள் அளவுக்கு சிறிதாக வைப்பது’ என்பது பொருள்.

மனம் ஏதாவது ஒரு விஷயத்தால் பாதிப்பு அடையும்போது, உஷ்ணத்தால் தலைவலி ஏற்படும். சந்தனம், குங்குமம் இடுவதால் தலை பாதிப்பு நேராமல் குளிர்ச்சி உண்டாகும். காளிதாசரின் ‘மாளவிகாக்னி மித்ரம்‘ என்னும் காவியம் திலகத்தின் பெருமையை விளக்குகிறது.

பிறரைக் கவர சிவப்பு, செல்வத்திற்கு மஞ்சள், அமைதிக்கு வெள்ளை, முகத்தின் பொலிவிற்கு கருப்பு நிறத்தில் திலகமிட வேண்டும். திலகமிடும் விரலுக்கேற்ப பலன் மாறுபடும். வலது கை மோதிர விரல் மன அமைதிக்கும், நடுவிரல் ஆயுள் விருத்திக்கும், கட்டை விரல் மன வலிமைக்கும், ஆள்காட்டி விரல் மோட்சத்திற்கும் வழிவகுக்கும்.



www.aanmeegamalar.com







www.aanmeegamalar.com

# மனிதனின் தலையும் நவக்கிரக ஆளுமையும்

நவக்கிரகங்களும் நம்முடைய தலையில் இருக்கும் உறுப்புகளை ஆதிக்கம் செய்கிறது. நமது ஜாதகத்தில் ஏதாவது கிரக பாதிப்புகள் இருந்தால், அதற்குரிய அவயங்களில் பாதிப்புகள் உண்டாகும்.

மனிதன் பிறக்கும் போதே, அவனுக்கான தலைவிதி எழுதப்படுவதாக மக்களின் நம்பிக்கை. அந்த தலையெழுத்தைத் தான் ஜோதிடத் துறை கணித்துக் கூறுகிறது. 'எண் ஜான் உடலுக்கு சிரசே பிரதானம்' என்பார்கள். ஆறு அடி உயரம் கொண்ட மனிதனில், ஒரு அடி கொண்ட தலை தான் முக்கியத்துவம் பெறுகிறது.



நமது உடலில் ஏற்படும் அனைத்து வகையான உணர்ச்சிகளுக்கும் தலை யே முக்கிய பங்கு வகிக்கிறது. நம் முடைய அனைத்து செயல்களுக்கும் மூளையே உத்தரவு பிறப்பிக்கிறது.

மூளையின் உத்தர வின்றி எந்த விதமான அசைவுகளும், உணர்வுகளும் நம்மிடம் இருக்காது. ஒரு மனிதனின் அடையாளம் என்ன என்பது, தலையை வைத்து தான் கூறப்படுகிறது.

நாம் ஒரு கடின முயற்சியில் வெற்றி பெறுகிறோம். அதற்குரிய வெற்றி கிரீடம் நம் தலையில் தான் வைக்கப்படுகிறது. நம் தலை அப்படி என்ன செய்து விட்டது?.

அந்த வெற்றிக்குரிய அறிவும், ஆற்றலும், விடாத முயற்சியும், ஓயாத உழைப்பும் மூளையின் செயல்பாட்டால் வந்தது. நமது மூளைக்கு மகுடம் சூட்ட முடியாமல், அந்த மூளை பகுதி இருக்கும் தலைக்கு மகுடம் சூட்டி விடுகிறோம். ஆழ்ந்த சிந்தனை, தெளிவான அறிவு, அதி புத்திசாலித்தனம் இவையாவற்றுக்கும் காரணம் நம் மூளை தான்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட தலைப் பகுதியை நவக்கிரகங்கள் எவ்வாறு ஆதிக்கம் செய்கின்றன என்பதைப் பார்ப்போம்.









**சூரியன்:** உச்சி தலை, மண்டை ஓடு, கண் ஒளி, மேல் தாடை, கரு விழி ஒட்டிய தசை, பார்வை சக்தி.

**சந்திரன்:** கவர்ச்சியான காந்த ஈர்ப்பு கொண்ட முக அமைப்பு, முகவடிவம், கன்னம், தலையில் உறையும் நீர், எச்சில், சுரப்பிகள், நெற்றி.

**செவ்வாய்:** மூளையை சுற்றி ஓடும் ரத்த ஓட்டம், ரத்த நாளம், செவிப் பறை, மேல் உதடு.

**புதன்:** சிறு மூளை, இரண்டு காது,தலை உச்சியில் தொடங்கும் நரம்பு மண்டலம், கண்களுக்குள் இருக்கும் நரம்பு.

**குரு:** பெரிய மூளை, மூளையின் சக்தி, பற்கள், தலை தசைகள், கண் கருவிழி.

**சுக்ரன்:** மூக்கு, அழகான மூக்கு வடிவம், கண்கள் கீழ் தாடை,கீழ் உதடு, கண் லென்ஸ், பார்வையின் தூரம்.

**சனி:** பின் தலை, தலைமுடி, புருவம், நாக்கு, நாக்கின் கீழ் உள்ள தசைகள், சிறு நாக்கு.

**ராகு:** மூக்கு துவாரம், நாசி, மூச்சுக் குழாய்.

**கேது:** பற்களைத் தாங்கும் ஈறுகள், கீழ் தாடை தசைகள்.



நவக்கிரகங்களும் நம்முடைய தலையில் இருக்கும் உறுப்புகளை ஆதிக்கம் செய் கிறது என்பதைப் பார்த்தோம். நமது ஜாதகத்தில் ஏதாவது கிரக பாதிப்புகள் இருந்தால், அதற்குரிய அவயங்களில் பாதிப்புகள் உண்டாகும். ஒருவரது ஜாத கத்தில் குருவும், புதனும் இணைந்து இருந்தால், அந்த நபர் மிகப்பெரிய அறி வாளியாக இருப்பார்.

இதுவே குரு, புதன் வலிமை குருவாக காணப்பட்டால், அந்த நபரின் அறிவுக் கூர் மை சொல்லும் படியாக இருக் காது. நமது மூளைக்கு அதிபதியாக குருவும், நரம்புக்கு அதி பதியாக புதனும் இருப்பதாலேயே இந்த அறிவுத் திறன் வெளிப்படுகிறது. காதலுக் குரிய கிரகம் செவ்வாய், சுக்ரன் ஆகும். காதலின் அடையாளமாக வெளிப்படுவதில் முத்தத் திற்கு முக்கிய பங்கு உண்டு.

இந்த முத்தம் கொடுக்க மேல் உதட்டில் ஆதிக்கம் செய்யும் செவ்வாய், கீழ் உதட்டில் ஆதிக்கம் செய்யும் சுக்ரன் இரண்டின் இணைப்பே ஆசையின் தூண்டுதலாக இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் கிரகங்களின் காரணமாகத் தான் நமது செயல்பாடுகள் உள்ளது என்பதை ஜோதிட சாஸ்திரங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

– மூ.சக்திவேல், போன்:09787576858









www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# மயிலாப்பூரில் வசிப்பவர்கள் புண்ணியம் செய்தவர்கள்

## மகாபெரியவர் கூறிய அற்புத விளக்கம்

மயிலையே கயிலை என்பார்கள். மயிலாக அவதரித்த பார்வதி தேவி பூமியில் தான் வசித்த பகுதியை கயிலையாகவே மாற்றினார்.

மயில் வடிவில் இறைவனை வழிபட்டு தனக்கு விமோசனம் பெற்று இறைவனுடன் ஐக்கியமான பார்வதி தேவியால் மயிலை மிகவும் பிரசித்தி பெற்றது. மயிலையின் பெருமையை இதனை காஞ்சி மகா பெரியவர் மிக அழகாக கூறியுள்ளார்.



காஞ்சி மகா பெரியவர் அதிகமாக திருத்தல யாத்திரை மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டவர். அவ்வாறு ஒரு சமயம் சென்னைக்கு விஜயம் செய்தார். சென்னையில் முகாமிருந்த பெரியவாளை தரிசிக்க பக்தர்கள் காத்திருந்தனர்.

அப்போது மிகப் பெரிய தமிழறிஞர் கி.வா.ஜ வை (கி.வா.ஜகந்நாதன்) அவர்களின் மருமகளான திரிபுரசுந்தரியும் காஞ்சி மகா பெரியவாளை தரிசித்தார்.

மகானைத் தரிசிக்கக் காத்திருக்கும் பக்தர்கள் வரிசையில் நின்று, மெள்ள மெள்ள ஊர்ந்து சென்று மகா பெரியவாளின் திருச்சந்நிதியை அடைந்தார் திரிபுரசுந்தரி.

மகா பெரியவாளுக்குத் திரிபுரசுந்தரி அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மகானுக்குத் தான் கொண்டு வந்த பழங்கள், புஷ்பங்கள் போன்ற காணிக்கைப் பொருட்களை ஒரு மூங்கில் தட்டில் வைத்து விட்டு நமஸ்கரித்தார்.

தன் வலக்கையை உயர்த்தி, திரிபுரசுந்தரியை ஆசிர்வதித்து விட்டு, "மெட்ராஸ்ல எங்க தங்கி இருக்கே?" என்று கேட்டார் மகா பெரியவா.

"மயிலாப்பூர்லதான் பெரியவா." திரிபுரசுந்தரி.

"மயிலாப்பூர்ல கோவில்களுக்குப் போற வழக்கம் உண்டா?"

"ஆமாம் பெரியவா. அதுவும் கபாலீஸ்வரர் கோவில்ல கற்பகாம்பாள்னா எனக்கு அவ்ளோ இஷ்டம்" என்றார் முகம் முழுக்க பரவசத்துடன்.

"கற்பகாம்பாள்கிட்ட என்ன வேண்டிப்பே?"

"எப்பவும் உலக நலனுக்காகத்தான் வேண்டிப்பேன் பெரியவா. தெய்வங்கள்கிட்ட நமக்குன்னு எதுவும் கேக்கக் கூடாதுனு என் மாமனார் (கி.வா.ஜ.) சொல்வார்."

"பலே... நான் ஒண்ணு சொல்றேன். நன்னா கேட்டுக்கோ" என்றவர், திரிபுரசுந்தரி மட்டுமல்லாமல், தன் அருகே கூடி இருந்த அனைவரையும் நோக்கிப் பேச ஆரம்பித்தார்.



"உன்னோட போன பிறவிகள்ல நீ பண்ண புண்ணியத்துனாலதான் இப்ப மயிலாப்பூர்ல வசிக்கறே.

இங்க இருக்கற கற்பகாம்பாள் யாரு தெரியுமா? கற்பக விருட்சம். தேவலோகத்துல கற்பக விருட்சம்னு ஒரு மரம் இருக்கு. அதுக்கு அடியில நின்னுண்டு யார் என்ன கேட்டாலும் அந்த விருட்சம் ஒடனே குடுத்துடும்.

அதுபோல இந்த கற்பகாம்பாள் சந்நிதிக்கு முன்னாடி நின்னுண்டு நீ என்ன கேட்டாலும் குடுத்துவா" என்று மகா பெரியவர் சொன்னபோது, மயிலாப்பூர்வாசிகள் அனைவரும் பரவசம் மேலிட, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

மகா பெரியவர் தொடர்ந்தார்: 'எத்தனை எத்தனை ஜன்மம் எடுத்தாலும் மயிலாப்பூர்லயே பிறக்கணும். உன்னை தரிசிச்சுண்டே இருக்கணும்'னு அவ கிட்ட கேட்டுக்கோ. அவளோட பார்வைல யாரும் பசியோட இருக்கறதைப் பாத்துண்டு இருக்க மாட்டா. மயிலாப்பூர்ல இருக்கிற பிச்சைகாரா, நாய்கள் போன்ற அனைவருக்கும் கற்பகாம்பாள்தான் சாப்பாடு போடறா" என்று மகா பெரியவர் முடித்ததும், திரிபுரசுந்தரி கண்களில் நீர் கசிய "பெரியவா..." என்று பெரும்குரலெடுத்து மீண்டும் அந்த மகானை வணங்கினார் திரிபுரசுந்தரி.

தொகுப்பு: காஞ்சி வரதன்





www.aanmeegamalar.com

# அட்சயதிருதியை...

# புண்ணியத்தை இரட்டிப்பாக்கும் தங்கத்தை அல்ல....

ஒவ்வொரு வருடத்திலும் ஒருசில நாட் கள் மிகவும் புண்ணிய, புனித நாளாக விளங்குகிறது, அந்தவகையில் அட்சய திருதியை என்பது, மிகச்சிறந்த சிறப்புகள் கொண்ட தினமாக விளங்குகிறது.

சோதிடத்தின் படி ஒவ்வொரு வருடத்திலும் மூன்றரை பௌர்ணமி நாட்கள் (திதிகள்) மிக மங்களகரமானவையாகக் கருதப்படுகின்றன. இவை மூன்றரை திதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவை:

சித்திரை மாத வளர்பிறையின் முதல் திதி “புது வருட துவக்கமாகவும்'',

ஆவணி மாதத்தின் வளர்பிறையின் பத்தாம் திதி “விஜய தசமியாகவும்'',

வைகாசி மாதத்தின் வளர்பிறையின் மூன்றாம் திதி “அட்சய திருதியையாகவும்''

கார்த்திகை மாதத்தின் வளர்பிறையின் முதல் திதி அரை திதியாகக் கணக்கில் கொண்டு “மூன்றரை 3½ முகூர்த்தங்கள்” என்று அழைக்கப்படுகின்றன.

முதல் மூன்று திதிகள் முழுமையான திதிகளாகவும் கடைசி திதி அரை திதியாகவும் கணக்கிடப் படுகின்றன. இவை மொத்தம் சேர்ந்து மூன்றரை முகூர்த்தத்தை வழங்குகின்றன. சோதிட சாத்திரத்தின்படி இந்நாளில் சூரியனும் சந்திரனும் சம அளவு உயரொளியுடன் விளங்கும் என நம்பப்படுகிறது.

அட்சய திருதியை நவன்ன பர்வம் எனவும் அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட மூன்றரை நாட்களில், இறை பாராயணம், தவம், கொடைகள், சடங்கு ரீதியான முழுக்கு, தியாகங்கள், வேள்வி செய்தல் ஆகியன செய்தால் பல்வேறு நன்மைகள் ஏற்படும்.

இந்த தினத்தில் மறுமைக்கு (மனித வாழ்க்கை முடிவுக்கு பின்) வேண்டிய செயல்களை செய்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒருசில காரண காரியங்களால் இம்மைக்கு (தற்போதைய வாழ்க்கைக்கு) வேண்டியவற்றை செய்தாலும் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று திரித்து கூறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மொத்தத்தில் இது ஆன்மீக நடவடிக்கைகளுக்கே உகந்ததேயன்றி, உலகாதாயச் செயல்களுக்கு உகந்த நாள் அல்ல என்று கருதப்படுகிறது.

இருப்பினும், இந்த திதியில் உலகாதாய நடவடிக்கைகள் தொடங்குவதும் கூட சிறப்பே. ஆனால் இந்து மதத்தின் நல்ல நேரம் பார்க்கும் சோதிட சாத்திரத்தின் நேரத்துடன் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் கோள்களின் நகர்வும் அது போன்ற அம்சங்களும் செயலைச் செய்பவருக்கு சாதகமாக இருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதுபோன்ற நல்ல நாட்களை பின்பற்றுபவர்கள் இந்தத் திதியை குருட்டுத்தனமாக அனைத்து விதமான வாழ்வுசெயற்பாடுகளைத் துவக்கவும் நடத்தவும் பயன்படுத்தக் கூடாது. இந்த நாட்களில் செய்யப்படும் செயல்களுக்கு இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்ற காரணத்தினால், முடியாத செயலை கஷ்டப்பட்டு செய்து பலனை எதிர்பார்த்து காத்திருக்கக் கூடாது.

ஆக மொத்தத்தில் இந்த அட்சய திருதியை என்பது ஒருசிறப்பு வாய்ந்த நாள் இந்த நாளில் பொன்நகைகள் வாங்கினால் சுபிட்சம் பெருகும் என்று இந்து தர்ம சாஸ்திரம் எதுவும் கூறவில்லை, தற்போது சில வருடங்களாக அட்சய திருதியை நாள் அன்று நகை கடையில் வரிசையில் நின்று நகை வாங்குவது என்பது சொல்லப்படாத, எழுதப்படாத மரபாக மாறிவருகிறது. இவை அனைத்தும் தங்க நகை வியாபாரிகள், ஊடகங்களின் உதவியுடன் நடைமுறைக்கு கொண்டு வந்தவையே.

> “அட்சய திருதியை என்பது ஒருசிறப்பு வாய்ந்த நாள் இந்த நாளில் பொன்நகைகள் வாங்கினால் சுபிட்சம் பெருகும் என்று இந்து தர்ம சாஸ்திரம் எதுவும் கூறவில்லை, தற்போது சில வருடங்களாக அட்சய திருதியை நாள் அன்று நகை கடையில் வரிசையில் நின்று நகை வாங்குவது என்பது சொல்லப்படாத, எழுதப்படாத மரபாக மாறிவருகிறது.”

வீட்டில் உள்ள பழைய நகையை சுத்தம் செய்து லட்சுமி, குபேரர் முன்பு வைத்து பூஜை செய்தாலே இந்நாள் விஷேஷமானதாக இருக்கும், அன்றைய தினம் கனகதாரா ஸ்தோத்திரத்தை லட்சுமி தேவியின் முன்பு பாராயணம் செய்தால் சகல ஐஸ்வர்யம் குடும்பத்திற்கு கிடைக்கும்.

மேலும் செவிவழிச் செய்தியாக, இந்த நாளில் வீட்டிலுள்ள பல்லிகள் யார் கண்ணிலும் தென்படாமல் மறைந்து விட வேண்டும் என்று வாஸ்து பகவான் கட்டளையிட்ட நாளாகவும் கூறுவார்கள்..

## இந்த சிறப்பு தினத்தில் நடைபெற்ற விஷேஷங்கள்

இந்து இதிகாசப்படி, அட்சஷய திருதியை நாளன்றே வேதவியாசர் மகாபாரத





ஆன்மிகமலர் மெயில் புக்

# வாஸ்து தோஷம் பீடையை நீக்கும் பல்லி



ஒருசில சமுதாய மக்கள் பல்லியை வழிபடவும் செய்வார்கள். இந்த அட்சய திருதியை நாளன்று பல்லியை கண்டு விட்டால் எல்லா பீடைகளும் நீங்கி, திரிஜென்ம பாபமும் நீக்கப்பெற்று அனைத்து செல்வங்களும் பெற்று லட்சுமி கடாக்ஷத்துடன் வாழ்வர். என்று அந்த குறிப்பிட்ட சமுதாயத்தினர் நம்பிக்கையாகவும் உள்ளது.

இதிகாசத்தை விநாயகரிடம் எழுதச் சொல்லி கட்டளையிட்டார்.

திருமாலின் அவதாரமான பரசுராமரின் பிறந்த நாளாகவும் கடைபிடிக்கப்படுகிறது.இன்றும் கோவாவும் கொங்கண் பகுதியும் பரசுராம சேத்திரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

வைசாக மாதத்தின் வளர்பிறையின் மூன் றாம் நாளான அட்சய திருதியை வருடத்தின் மிகப் புனிதமான நாட்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

பொதுவாக இந்த நாளில் திருமாலை நெல் அரிசியுடன் வணங்கியும் உண்ணா நோன் பிருந்தும் வழிபடுவர். இந்நாளில் கங்கை நதி யில் நீராடுவது மிக மங்களகரமானது எனக் கருதப்படுகிறது.

காசியில் அன்னபூரணித் தாயாரிடமிருந்து, சிவபெருமான் தமது பிட்சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்ற தும் அட்சய திருதியை அன்றுதான்.

பாஞ்சாலியின் மானம் காக்க, கண்ணன் ‘அட்சய’ என்று கூறி பாஞ்சாலியின் ஆடை யை வளரச் செய்ததும் அட்சய திருதியை நாளன்றுதான்.

வேதத்தில் அட்சய திருதியை நாளில் அறிவு பெறுதல் அல் லது கொடையளித்தல் நல்ல பலனளிக்கும் எனக் கூறுகின்றன. இது புதிய வணிகத்தினையோ அல்லது முயற்சியையோ துவங்க வெகு நன்னாளாகக் கருதப் படுகிறது. பலர் இந்த நாளில் தங்கம் அல்லது சொத்து வாங்குகின்றனர்.

மக்கள் இந்த நாளில் உண்ணாநோன்பும் பூசைகளும் கடைபிடிக் கின்றனர். விசிறி, அரிசி, உப்பு, நெய். சருக்கரை, காய்கறிகள், புளி, பழம், துணிகள் ஆகியவற்றை கொடை யாக அளிக்கின்றனர். இந்த நாளில் திருமாலை வணங்குகின்றனர். தீப வழிபாடு செய்யும் போது சிலையின் மீது அல்லது அருகில் துளசி தீர்த்தம் தெளிக் கப்படுகின்றது.

வங்காளத்தில், அட்சய திருதியை நாளில், “அல்கதா” எனும் விழா கொண்டாடப்படுகிறது. அது விநாயகர் மற்றும் லட்சுமியை வணங்கி புதிய வணிகக் கணக்குப் புத்தகத்தை எழுதத் தொடங்கும் நாளாகும். வங்காளிகள் இந்த நாளில் பல சமயச் சடங்குகளையும் செய் கின்றனர்.



அட்சய திருதியை திருமணங்களுக்கு ஏற்ற காலமாகவும் கருதப்படுவதால் அந் நாளில் பெரும் எண்ணிகையிலான திருமணங்களும் நடத்தப்படு கின்றன.

செல்வத்திற்கு அதிபதியான குபேரரே செல்வமிக்க கடவுள் என நம்பப்படுகிறார். இந்த நாளில் குபேரர் கூட விஷ்ணுவின் மனைவியும் செல்வத்திற்கான தெய்வமான லட்சுமியை வணங்கு வார் என லட்சுமி தந்தரம் எனும் நூல் கூறுகிறது.

இந்த நாளில், குபேர லட்சுமி பூசை நடத்தப் படுகிறது. அதில் லட்சுமி உருவப்படத்துடன் குபேரரின் அடையாளமான சுதர் சன குபேர எந்திரமும் ஒன்றாக வைக்கப்பட்டு வணங்கப் படுகிறது.





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

## ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 310601011001269**
**IFSC CODE:VIJB0003106**
**MICR CODE: 600029043**
**VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
**8825844033**

# நம்பிக்கையின் ஒரு சோதனை

33 பாகம்

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸர் தன்னுடைய நிகழ்வு ஒன்றினை கூறுகிறார்: “தெய்வீக அன்னையைப்பற்றியும், அவருடன் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைப் பற்றியும் ஒரு சிறிய கதையை நான் உங்களுக்குக் கூறுகின்றேன். ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் தலைமை பீடத்தின் நிலப்பரப்பில் கான்கிரீட் வார்ப்பினால் ஆன ஒரு சிறிய, வேண்டுவதைக்கொடுக்கும் கிணறு” உள்ளது. அதை வாங்கிய சீக்கிரத்தில் அதை தக்க இடத்தில் நகர்த்துவதற்காக, இளைஞர்களுக்கு நான் உதவிக்கொண்டிருந்தேன். அக்கிணறு எதிர்பாராத விதமாக நழுவி என்னுடைய பாதத்தில் அதன் பயங்கரமான முழு பாரத்துடன் விழுந்தது. முழுதும் கூழாகிப்போனதுபோல் தென்பட்ட பாதத்தில் கடுமையான வலியும் வீக்கமும் இருந்தன.

நான் எனது அறைக்கு தூக்கிச் செல்லப் பட்டேன். எனது நண்பர்கள் ஒரு மருத்துவரை அழைக்க விரும்பினர். “என்னிடம், தெய்வீக அன்னை ஒரு வைத்தியரைப் பார்க்கும் படி கூறினால் நான் செல்வேன். அப்படி அவர் கூறாவிட்டால், நான் செல்லமாட்டேன்.” எனக் கூறினேன். அவளுடைய திருவுள்ளம் என்னவாக இருக்கும் என்பதை அகத்தே உணரவேண்டி, நம்பிக்கையுடன் காத்திருந்தேன். நாட்கள் செல்லச் செல்ல, எனது காலில் உள்ள வலி கிட்டத்தட்ட தாங்க முடியாத அளவிற்கு ஆகிவிட்டது. தெய்வீக அன்னையிடமிருந்து எந்தவித அறிகுறியும் கிடைக்கவில்லை.

அடுத்த ஞாயிறு அன்று, நான் ஒரு பெரிய வகுப்பிற்கு போதிக்கவேண்டியிருந்தது. மேடைக்கு நான் தூக்கிச் செல்லப்படவேண்டும் போலத் தோன்றியது. என் பாதத்தை காலணிக்குள் செலுத்த முடியவில்லை. அந்த ஞாயிறு அன்று மாயை (சாத்தான்), “குணமடைய வேண்டுமென நீ ஏன் பிரார்த்திக்கக்கூடாது?”எனக்கூறி என்னைத்தூண்டினான்.

ஆனால் பிரார்த்திப்பது சந்தேகிப்பதற்கு ஈடாகும். தெய்வீக அன்னை என் இக்கட்டான நிலைமையை அறிவாள். மேலும் அவளுடைய விருப்பத்திற்கிணங்க நடக்கத் தயாராக இருந்தேன். “நான் பிரார்த்திக்கப்போவதில்லை” என நான் கூறினேன். எனக்கு என்ன நேர்த்திருக்கிறது என்பதை பேரன்னை அறிவாள்.” அவளிடம் எனது நிபந்தனையற்ற சரணாகதியை உள் முகமாகச் சபதம் செய்தேன். “மரண அலையின்கீழ் அமிழ்ந்திருந்தாலும் அல்லது வாழ்க்கையின் பெருங் கடலலைகளின்மேல் மிதந்து சென்றுகொண்டிருந்தாலும் நான் என்றும் உன்னுடனேயே இருப்பன்.” இதைக்கேட்ட சாத்தான் மீண்டும் உரைத்தான், “இந்த மக்களைப்பார், அவர்கள் அனைவரும் உன்னை பார்த்துச் சிரிப்பார்கள். நீ நோய்வாய்ப்பட்டு இருந்ததை முன்பு எப்போதும் அவர்கள் கண்டதில்லை. தற்சமயம் அவர்கள் ஒரு காயமடைந்த பாதத்துடன் உன்னைக் காண்பார்கள்.” “எனக்குக் கவலையில்லை.” தெய்வீக அன்னையின் அன்பு இருக்கும்போது புகழோ அல்லது பழியோ தீண்டாது.




பேசவிருந்த மேடையை நோக்கி நான் நொண்டி நொண்டிச் சென்றுகொண்டிருந்தேன். அச்சமயம் நான் அஜாக்கிரதையாக நுழைவாயிலில் சறுக்கி விழுந்துவிட்டேன். என் காயமடைந்த பாதம் மோசமாக முறுக்கிக்கொண்டது. அதிலுள்ள ஒவ்வொரு எலும்பும் நொறிங்கிவிட்டார்போன்று நான் உணரும் அளவிற்கு வேதனை அதிகமாக இருந்தது. ஆனால் காலை நான் மீண்டும் முன்வைத்த நேரத்திலேயே அந்தப் பயங்கரமான வீக்கம் திடீரென மறைந்தது. அனைத்து வலியும் என்னைவிட்டுப் போய்விட்டது; எனது பாதத்தை காலணிக்குள் போட முடிந்தது.

நான் இதுவரை அனுபவித்தவற்றில் அன்பின் சக்தியைப் பற்றிய மகத்தான சாட்சியங்களில் இதுவும் ஒன்றாகும். என் பாதத்தில் என்றும் குறைபாடே இருந்ததில்லை என்பது போல் நான் நடந்தேன். நான் மெய்சிலிர்த்துப்போனேன் என்பதைச் சொல்லத்தேவையில்லை குணமடைந்த காரணத்திற்காக அல்ல, மாறாக தெய்வீக சான்னித்தியத்தின் காரணமாக. நான் குணப்படுத்தலுக்காகப் பிரார்த்திப்பேனா என்பதை அவள் அறிய விரும்பினாள்.

நான் பிரார்த்திருந்தால் காலப்போக்கில் ஒரு வேளை, காயமுற்ற பாதம் இயற்கையாகவே குணமடைந்திருக்கக்கூடும். ஆனால் அவ்விதமான முழு நம்பிக்கையூட்டும் அத் தெய்வீக அனுபவம் எனக்கு ஏற்பட்டிராது.

மற்றொரு சமயம் பாம் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்தில் அன்னையிடம் பாடிக் கொண்டிருந்தேன், “அம்மா உனக்கு நான் கொடுத்தேன் என் ஆன்மாவின் அழைப்பு. இனி நீ மறைந்திருக்க முடியாது! வாராய் மௌன வானத்தினின்று, வாராய் மௌன குகையினின்று”. திடீரென அவள் தோன்றினாள்! கற்களிலும்பனை மரங்களிலும் எங்கெங்கும் அவளை நான் கண்டேன்! இறைவனுக்கு வடிவம் கிடையாதாயினும், ஒரு பக்தனை மகிழ்விப்பதற்காக பக்தன் விரும்பும் எந்த ஒரு வடிவத்தையும் அவள் எடுக்க முடியும். தெய்வீக அன்னை எவ்வளவு அற்புதமானவள், எவ்வளவு மகிமை வாய்ந்தவள்; எவ்வளவு அன்புடையவள் என்பதைப்பற்றி நீங்கள் ஒன்றும் அறியமாட்டீர்கள்!

பிரபஞ்ச அன்னை உங்களுடன் இருக்கிறாள் என்பதை அறிவதையும் உணர்வதையும் விட வேறொரு சிறந்த அனுபவம் கிடையாது. அன்னையின் இருப்பினை எதிர்பார்த்திருங்கள். ஏனெனில் உங்களை ஒவ்வொரு விதத்திலும், உங்கள் சங்கடம் துன்பமாகவோ, வேதனை யாகவோ அல்லது நோயாகவோ இருப்பினும் அவள் காப்பாற்றுவாள். ஆறுதலுக்காக நீங்கள் ஏங்கும்பொழுது இறைவனை தெய் வீக அன்னையாகப் பிரார்த்தியுங்கள்; அறிவை நீங்கள் நாடும்பொழுது இறைவனை தெய்வீகத்தந்தையாகப் பிரார்த்தியுங்கள்.

இனிமேலும் உங்களை பாவிகளாகத் தீர்மானித்துக்கொள்ளாதீர்கள்; உங்களுடைய தவறான பழக்கங்களை கைவிட்டுவிட்டு, “அன்னையே நான் உனது குழந்தை; உன்னை எனக்கு வெளிப்படுத்துவாயாக!” எனப் பிரார்த்தனை செய்யுங்கள். இறைவனை தெய்வீக அன்னையாகக் கருதி இரவிலும் காலையிலும் இடைவிடாது இந்த வேண்டுதலைச் செலுத்துவீர்களானால், அவள் தானாகவே உங்களுக்கு வெளிப்படுவாள்.

இறைவனுக்கு நமது நன்றியைச் செலுத்தி, எல்லாத் தாய்மார்களும் அவனுடைய குணங்களை வெளிப்படுத்தும் வல்லமையைப் பெறுவதற்கு அவர்கள் அனைவருக்கும் அவனுடைய அருளாசிகளை வேண்டிப்பிரார்த்திப்போமாக.”

“தெய்வீக அன்னையின் நிபந்தனையற்ற அன்பின் பிரதிபலிப்பாக உள்ள தாய் அன்பினால், உலகிலுள்ள எல்லா புத்திரர்களும் புத்திரிகளும் நிரப்பப்படட்டும்; அத்துடன் அதே நிபந்தனையற்ற தாய் அன்பை ஒருவருக்கொருவர் கொடுப்பார்களாக; அதனால் பூவுலகில் சமதானமும் சுவர்க்கமும் நிலவுவதாக”

இது சம்மந்தப்பட்ட சில விஷயங்களை இங்கே கூற நான் விரும்புகிறேன்.

குருதேவர் தன் கால் வலியை தீர்த்துத் தரும் பொருட்டு தெய்வீக அன்னையிடம் பிரார்த்தனை செய்யமாட்டேன் என்று உறுதியுடன் இருந்த காரணமே அவர் தெய்வீக அன்னையிடம் சரணாகதி அடைந்ததனால்தான். அவ்வாறு சரணாகதி அடைபவர் யார் என்றும் அவர் எப்படிப்பட்ட குணங்களை உடையவர் என்பது

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

பற்றியும் பகவத்கீதை அத்தியாயம் 16 ஸ்லோகம் 13 ல் கூறப்பட்டுள்ளது.

அர்ஜுனன் கிருஷ்ணனிடம் கேட்டான்: "பகவானே! மிகவும் ரகசியமான அந்த தத்துவங்களை அறிந்துகொள்ள தகுதிகொண்டவர் யார்?" கிருஷ்ணன் அருளினான்: இறையருட்செல்வம் உள்ள பக்தன் அந்த தகுதியைக் கொண்டவன். இறைவன் (தேவன்) பரமாத்மா, இறைவனின் அருட்செல்வம் நற்குணம். இதைத்தான் தெய்வீகசம்பத்து (இறை அருட்செல்வம்) என்பர். இதன் மூலமாக பரமாத்மாவை அடையமுடியும்)

அர்ஜுனன்: இறையருட் செல்வம் பெற்ற மனிதனின் அடையாளங்கள் (லட்சணங்கள்)எவை?

பகவான் கிருஷ்ண பரமாத்மா விவரிக்கலானார்:

1. என்னிடமே திடநம்பிக்கையுடன் ஈடுபட்டு அச்சமின்றி வாழ்தல்
2. அந்தக்கரணத்தில் (உள்மனம்) என்னை அடையவேண்டும் எனும் திடமான தீவிர நிச்சயம் கொள்வது.
3. என்னை தத்துவ விளக்கத்துடன் அறிவதற்கு ஒவ்வொரு சூழ்நிலையிலும் சமநிலையில் இருத்தல்.
4. சாத்வீகமான தானம் செய்தல்
5. ஐம்புலன்களையும் சுயக்கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
6. தன் கடமைகளை முறையாகச் செய்துவருதல்.
7. சாஸ்திரங்களின் தீர்ப்புகளை (சித்தாந்தங்களை) உன்னத கருத்துக்களாகக் கொண்டு சொந்த வாழ்வில் செயல்படுத்துதல்.
8. தன் கடமைகளைச் செய்துவரும்பொழுது ஏற்படும் இன்னல், இடையூறுகளை மகிழ்ச்சியுடன் பொறுப்பது.
9. உடலாலும், உள்ளத்தாலும், வாக்காலும் எளிமையாக வாழ்தல்.
10. உடல், உள்ளம், வாக்கு இவற்றால் எந்தப் பிராணிக்கும் சிறிதளவும் துன்பம் தராதிருத்தல்.
11. கண்டதையும் கேட்டதையும், அறிந்ததையும் உள்ளபடியே இனிய சொற்களால் சொல்லுதல்.
12. எவரிடமும், எதனிடமும் குரோதம் (வெறுப்பேறிய வெஞ்சினம்) கொள்ளாதிருத்தல் எல்லாமே ஈசுவரசொரூபம் என்ற உணர்வுடன் பழகுதல்.
13. உலகியல் ஆசை அபிலாஷைகளைத் துறப்பது.
14. அந்தக்கரணத்தில் (உள் மனதில்) விருப்பு வெறுப்புகளால் எழும் கொந்தளிப்புகளை அடக்குதல்.
15. கோள் பேசாதிருத்தல்.
16. எல்லா உயிரினங்களிடத்திலும் இரக்கம், பரிவுகொண்டு பழகுதல்.
17. உலகியல் பொருட்களில் பேராசை கொள்ளாதிருத்தல்.
18. மென்மையான இதயம் கொண்டிருத்தல்.
19. செய்யத்தகாததைச் செய்வதில் வெட்கப்படுதல்.
20. சபல சித்தம், அவசரப்படுதல் இரண்டும் இல்லாதிருத்தல்.
21. உடல், வாக்கு இரண்டிலும் செல்வாக்கும் பொலிவும் கொண்டிருத்தல்.
22. தண்டனை அளிக்கும் திறன் இருந்தாலும் குற்றவாளியின் குற்றத்தை மன்னித்தல்.
23. எந்தச்சூழ்நிலையிலும் தைரியமும் பொறுமையும் கொண்டிருத்தல்.
24. உடலை தூய்மையாக வைத்திருத்தல்.
25. பழிவாங்கும் உணர்ச்சி இல்லாதிருத்தல்.
26. உயர்வு மனப்பான்மையும் செருக்கும் கொள்ளாதிருத்தல்.

பரதவம்சத்து வீரனே! இவையாவும் தெய்வீக சம்பத்து (இறையருட்செல்வம்) பெற்ற மனிதனின் லட்சணங்களாகும். இந்த இயல்புகளைக் கொண்டிருக்கும் மனிதன்தான் என்னிடம் பக்தி செலுத்தத் தகுதிபெற்றவன். அவனே சரணாகதி அடையக்கூடியவன். (பகவத்கீதை அத்16 ஸ்லோகம்.13)

மேலும் அர்ஜுனன் கேட்கிறான்: "தெய்வீக சம்பத்துக்கு அருகதை அற்றவன் எவன்?"

கண்ணபிரான் விவரிக்கலானார்: அசுரத் தன்மை உள்ள செல்வத்தைக் கொண்டவன். (அஸூ என்றால் உயிர். உயிர் நிலைகளிலேயே பற்றுதல் கொண்டு வாழ்பவர்கள். அவைகளை விரும்புபவர்கள் 'அஸூரர்' எனப்படுவர். உடலைப் பேணி உடல் இன்பத்திற்காகவே வாழ்ந்தும், வாழ விரும்பியும் இந்த உடலே நான் என்று கருதுபவர் அசுரர். நான் இறக்கமாட்டேன்; எப்பொழுதும் வாழ்ந்து மகிழவேண்டும்; சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் அஸூரர்கள். இந்த நினைப்பும் இதற்கான முனைப்பும்தான் அசுர சம்பத்து (தீய செல்வம்) எனப்படும்.

"அசுர சம்பத்து கொண்ட மனிதனின் அடையாளங்கள் எவை?" என்று அர்ஜுனன் கேட்கிறான்.

கண்ணபிரான் அருளுகிறார்:

1. வெளிப்பகட்டுடன் செயற்கைப் பெருமையைக் காட்டிக்கொள்ளுதல்.
2. கர்வம் கொள்ளுதல், பற்றுதல் கொண்டுள்ள பொருட்களை வைத்துக்கொண்டு செருக்குடன் பெருமைப்படுதல்.
3. செருக்கடைய வைக்கும் பொருட்களிலும் கருத்துக்களிலும் ஈடுபட்டு பெருமிதம் கொள்ளுதல்.
4. குரோதம் கொள்ளுதல்.
5. மனம், வாக்கு, செயல்களில் கடுமையும் கொடுமையும் கொண்டிருத்தல்.
6. நல்லது பொல்லாதது, உண்மை, பொய், கடமை, கடமையில்லாதது (செய்யத்தக்கது, செய்யத்தகாதது) முதலியவற்றில் பகுத்தறிந்துகொள்ளும் விவேகத்திற்கு மதிப்பளிக்காதிருத்தல்.

அர்ஜுனா! இவை அசுரசம்பத்தைப் பெற்ற மனிதருக்குள்ள அடையாளங்கள் இவர்கள் என்னிடம் பக்தி செலுத்தத் தகுதியற்றவர்கள். (கீதை அத்16 ஸ்லோ.4)

தெய்வீக சம்பத்து அதாவது இறை அருட்செல்வம் பிறவிப்பெரும்தளைகளைப் போக்கி வீடுபேறு (முக்தி) அளிக்கவல்லது. அசுரசம்பத்து பந்தங்களை ஏற்படுத்தி ஜனனமரணச்சூழலில் சிக்கவைக்கிறது. நீ கவலைப்படாதே; நீ தெய்வீகச் செல்வத்தைப் பெற்றிருப்பவன் (கீதை அத்16 ஸ்லோ5).

இவைகள் இரண்டிற்கும் உள்ள விளைவுப் பற்றிக்கூறும்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிடம் கேட்டபோது கிருஷ்ணன் அர்ஜுனனிடம் கூறினார்.

இந்த இடத்தில் ஒரு சந்தேகம் எழும். தெய்வீகசம்பத்து உடைய லட்சணங்களைக் கொண்டமனிதர்தான் ஆண்டவனிடம் பக்திசெலுத்த தகுதிபெற்றவர்கள், மற்றவர்கள் அல்லர். தீய இயல்புகள் கொண்டவர்கள் பக்தி செலுத்தக்கூடாதா? பக்தி செலுத்தலாம். தீய மனிதன் திருந்தி ஆண்டவனை வழிபட்டு மேன்மையைப் பெற முனைந்தால் அவனுக்கு நற்பயன் கிட்டும். அவன் விரைவிலேயே அறநெறிசீலராக மாறுகிறான். திருந்திய மேம்பட்ட அந்த மனிதரிடமும் இறைஅருட்செல்வம் இடம்பெறுகிறது. என் பக்தன் எப்பொழுதுமே நெறிதவறமாட்டான்; வீழ்ச்சிடையமாட்டான். (பகவத்கீதை அத்.9 சுலோகம் 30,31)



எல்லாமே இறைவனிடத்திலிருந்து வருவதாகையால் மனிதன் தனிப்பட்ட முறையில் எதுவுமே அறியாமலிருக்கிறான். அவனுடைய எல்லாக்குழந்தைகளுக்கும் எல்லாவற்றையுமே உணர்த்திக்கொண்டுதான் இருக்கிறான். அதுபோன்று எனக்கு உணர்த்தியுள்ள சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

ஓர் உண் மையான தீவிர இறைபக்தன் இருக்குமிடத்தில் அவனுடன் இருப்பவர்கள்உடன் பிறப்புகளோ அல்லது மற்றவர்களோ காலப்போக்கில் இறைச்செல்வம் பெற்று மேன்மையடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில் இந்தத்தீவிர இறைபக்தனின் எப்பொழுதும் பிரபஞ்சத்தி லிருந்து வந்துகொண்டிருக்கும் தெய்வீக அன்பானது உடனிருப்பவர்களுக்கு பரவிக் கொண்டேயிருக்கும்.

அந்த அன்பு பிறருடைய வாழ்க்கையில் மிகுந்த நன்மையைத் தரவல்லது. அது அவர்களுடைய


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

ஆன்மீக வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் தங்களது கடமைகளை சரியாகச் செய்வதற்கும் உதவுகிறது.

தெய்வீக அன்பானது இறை அருட்செல்வம் பெற்றவர்களிடத்தில் எப்பொழுதும் ஊடுருவிக் கொண்டேயிருக்கும்; அவன்தான் தீவிர இறை ஏக்கம் கொண்ட தீவிர பக்தனாக இருப்பான். ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இறைவனிடத்திலிருந்து வந்துள்ள ஆத்மாக்கள் எல்லாம் இறைவனிடத்திலேயே திரும்பச் சென்று சேரவேண்டும். அதற்கு இந்த தெய்வீக அன்பு, உடனிருப்பவர்களை சிறிதுசிறிதாக இறைவன் பக்கம் திரும்பச் செய்கிறது. அருட்செல்வம் பெற்றவர்கள் இறைவனையும் இறை இருப்பி னையும் உணர்ந்தவராகையால் இறை ஈர்ப்பு சக்தி பெற்றவராகவும் இருப்பர். அதனால் அவர்கள் மற்றவர்களுக்காக, மற்றவர்களை இறை வனிடத்தில் சேர்க்கும்பொருட்டு அவர்க ளால் முடிந்தவரையில் அதற்காகப் பிரார்த்தனை செய்வர்.

ஏனென்றால் அவ்வாறானவர்கள் இறைவனையும் இறை இருப்பையும் மட்டுமே உணர்ந்தவரல்லர். இந்த சம்சார வாழ்க் கையையும் உணர்ந்தவராவர். அதனால் சம்சார வாழ்க்கையையும் பிற ருக்கு இறைவன் இப்படிப் பட்டவர்கள் மூலம் உணர்த்துவான். ஒருவன் பூமியில் பிறவியெடுத்துவந்து, அப்பிறவியை முடிக்கும் முன்னர் (இறப்பதற்கு முன்னர்) அவன் இறைவனை அறிந்துணர்ந்தேயாகவேண்டும் என அருட்செல்வம் பெற்றவர்கள் எண்ணுவர். அதுதான் மனிதனாகப் பிறந்த ஒருவனுடைய லட்சியமாக இருக்கவேண்டும். அதற்கான ஆயத்தங்களை ஆரம்பவாழ்க்கையிலிருந்தே அவன் தொடங்குவான். இவ்வாறு வாழ்பவர்கள் நிச்சயம் இறைவனை அறிந்து, உணர்ந்து அடைவர். உலகப்பொருட்கள் அனைத்தையும் துறந்து இறைவனை மட்டும் நேசித்து அவனை அடையவேண்டும்என்றதீவிரவைராக்கியத்துடன் அவனுடன் வாழுகின்றவர்கள்தான் தெய் வீக சம்பத்து உடையவர்கள்.

இந்த எண்ணமுடையவர்களுக்கு இறைவன் உடனிருந்து எல்லாவிதத்திலும் உதவிபுரிவான். ஒருவன் இவ்வாறானவர்களிடம் சகவாசம் கொண்டாலோ அல்லது இவ்வாறானவர்கள் இருக்குமிடத்தில் வாழ்பவர்களுக்கோ தெய்வீக சம்பத்து பெறுபவதற்கும் அதனால் இறை அன்பைப்பெற்று இறை அனுபூதி பெறுவதற் கும் ஏதுவாகும் என்பதில் துளியும் ஐயமில்லை.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909





# கோவில் குளத்து நீரில் பாதம் நனைப்பதின் பயன்

கோவில்களுக்கு செல்லும்போது மறக்காமல் சோம்பல் இல்லாமல் அந்த கோவிலின் குளத்தில் கால்கள் நன்றாக நனையும்படி சிறிது நேரம் நின்றுவிட்டு செல்லுங்கள். ஏனென்றால் பிரபஞ் சத்தில் இருக்கிற கிரகங்களின் கதிர்களை உள்வாங்கி தக்க வைத்து கொள்கிற தன்மை தண்ணீருக்கு உண்டு அதே போல் கடத்துகிற தன்மையும் தண்ணீருக்கு உண்டு. அந்த கோவிலில் எந்த சக்தி தீர்மானித்து கட்டியுள்ளனரோ, அந்த சக்தியை குளத்தில் உள்ள நீர் கிரகித்து தக்க வைத்து இருக்கும்.

மேலும் மூளைக்கு செல்லும் நரம்புகளின் நுனிகள் கால் பாதங்களின் முன் பகுதி, பின் பகுதி, பின் காலில் இருக்கிற மெல்லிய எலும்புகள் நம்முடைய முதுகு எலும்போடு தொடர்பு உடையதால் சில என்ற இந்த சக்தி நிறைந்த நீர் நரம்புகளை தூண்டி எலும்புகளை வலுபெற செய்து நீங்கள் கோவிலுள் பெற போகும் சக்திக்கு நம்மை ஆயத்தப்படுத்தும். பின் நுழைவாயிலில் இருக்கிற படிகளில் கால்பாதம் அழுந்த மிதித்து ஏற வேண்டும். இது இக்காலத்திற்கு சொன்னால் சிறந்த அக்குபஞ்சர் அழுத்தம். நம்முடைய கால்ப்லாடார், பெரிகாடியம், மூலையில் உள்ள பதிவு இடங்களை சமன் படுத்தும்.

கோவிலின் பிரகாரத்தை சுற்றி நடக்க நம்முடைய ரத்த அழுத்தம் சீராகும். ரத்த ஓட்டம் சீராகும்போது மூளையின் பரபரப்பு தன்மையும் அடங்கி மூலையில் சுரக்கும் சுரபிகளின் செயல்பாடும் சமன்படும். இதனால் உடலில் பரபரப்பு தன்மை அடங்கி அமைதி ஏற்படும். கோவிலின் உள்ளே செல்லும்போது உடம்பும் மனதும் ஒருமித்து இருக்கும். அப்பொழுது அக்கோவிலில் தீர்மானம் செய்யபட்டு போற்றி வருகிற சக்தி நம்முள் இறங்கும்.

நம்முடைய எண்ணங்களும் செயல்லபாடுகளும் பிரபஞ்சத்தில் இருக்கிற கிரகங்களில் இருக்கும் சக்தியின் ப்ரோக்ராம்மை சிறிது மாற்றும். நமக்கு எந்த கிரகத்தின் பாதிப்பு உள்ளதோ அதை சீர் செய்யும். கோவில் இருக்கிற சக்தி என்பது பிரபஞ் சத்தில் இருந்து பூமியில் விழுகிற கிரகங்களின் கதிர் வீச்சு அதை உள்வாங்கி தான் ஒரு ஸ்தூபி போல கற்பகிரகத்தில் நிறுத்தி இருப்பார்கள்.

கற்ப கிரகத்தில் இருக்கிற சக்தியை தூண்டுகிற விதமாகத்தான் கோவில்களில் பொருள்கள் பயன்படுத்தப்படும் பூ, சந்தனம், விபூதி, குங்குமம் போன்றவை. கர்பகிரகத்தின் உள்ளே ஏற்றப்படும் தீபம் கூட அச் சக்திக்கு தேவைபடுகிற அளவு வெப்பத்திற்கு தகுந்தாற்போல் 1,3,5,7,9, திரி தீபங்கள் ஏற்றப்படும்.

அங்கு வழங்கப்படுகிற பிரசாதம் கூட அச் சக்தியை நம் உடலுக்கு கொண்டு செல்லுகிற விஷயமாகத்தான் வைத்து இருப்பார்கள். மேலும் எந்த கோவிலிக்கு சென்றாலும் உட் பிரகரததிலோ அல்லது கோவில் வாளகத்தினுள்ளோ குறைந்தது ஒரு மணி நேரம் இருக்க வேண்டும்.

இதற்காகத்தான் இறைவனுக்கு பலவித அபிஷேக ஆராதனைகள், விளக்கு பூஜை, சங்கு பூஜை, அபிஷேகம், சொர்ண அபிஷேகம், போன்ற வற்றை செய்து, மேற்கண்டவை முடியும் வரை மக்களை கோவிலுள் இருக்க வைத்து, பல்வேறு சக்தியை பக்தர்களைப் பெற வைத்தார்கள் நம் முன்னோர்கள்.






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

♦♦♦

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033



# நன்மை தீமை அனைத்துமே ஆராய்ச்சியில்

1. மாறுவான், மாறமாட்டான் என்பதே மனிதனின் குணம். இது தானாக நிகழும். இல்லையேல் நாம் ஒருவனை மாற்ற முயல வேண்டும். செய்தாலும் இந்த வழி மிகவும் கடினம். முதலில் பலன் கிடைக்கும். மீண்டும் பழைய நிலைக்கே போய்விடுவான் மனிதன இது தான் மண்ணின் விதி. இதையே விதி என்க.

2. உதாரணத்தால் இதை விளக்குகிறேன். களிமண் கொண்டு செய்து சூளையிட்டு வெளியில் எடுத்த மண்பாத்திரம். இதை மாற்ற முடியாது. சூளையிட்ட பாத்திரத்தை மீண்டும் கணிமண் ஆக்க முடியாது. மீண்டும் உறுதியாக மாற்ற நினைத்தால் அப்பாத்திரம் சுக்குநுாறாகிவிடும். இது போல பிறவியோடு தோன்றிய ஒவ்வொரு மனிதனின் குணத்தையும் வேறு குணத்தவனாக ஆக்கமுடியாது, மாற்றமுடியாது.

3. சீனக்களிமண் என்பது வெள்ளைக்களிமண்.



இதனால் செய்ததே கோப்பையும், தட்டும். கப் அண்ட் சாசர் எனப்படும். இதை உடைத்துப் பொடியாக்கி களிமண் பானையாக்க முடியாது. அது போல சட்டிப் பானையை உடைத்து அப்பொடியின் கூறுகளால் வெள்ளைக் களிமண் கோப்பைகளை செய்ய முடியாது. இப்படி குணங்களை பேதித்து மாற்றவேமுடியாது என்பதனால் அவரவர்களின் குணப்படியே அவரவர்கள் இருப்பார்கள். இதுவே பிறப்பின் ரகசியம். இதனால் நம் இஷ்டப்படி அனைவரையும் நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும், மேதைகளாகவும், அறிவாளிகளாகவும், ஞானிகளாகவும், முட்டாளாகவும், பக்தர்களாவும் எந்த ஒரு உத்தியைக் கொண்டும் மாற்றமுடியாது. இதை உணராமல் இன்றைய உலகம் இருக்கிறது என்கிறார் ஞானிகள்.

4. மண், ஒளி, சக்தி, பூமி, வெளிச்சம் மற்றும் சக்தி. இதுவே உயிர்கள் என அறிந்துகொண்டிருக்கின்றனே. வடிவம், குணம், பிறப்பு பிறகே. டிசைன், தரம் மற்றும் பிறப்பு என அறி. இது ஞானி பிரும்மேந்திரர் கண்டுபிடித்த தத்துவம். மேலுலகம், கீழுலகம் இவைகளை இதனோடு சேர்த்து அலசிக்கொள்.

5. சூளையிட்ட மண்பானையை விரலினால் தட்டினால் ஒரு ஒலி கேட்கும். இது மண்ணொலி. பீங்கான் கோப்பைகளைத் தட்டினால் சற்று வித்தியாசனமான ஒலி கேட்கும். இப்படியே உலோகங்கள், கம்பிகள், ஒலிகளெல்லாம் ஒன்றே என்று பேசினாலும் வித்தியாச வித்தியாசமாக கேட்கின்றன. இப்படியே மனிதர்கள்.

6. சிந்தனை வேறுபாடுகள் சிந்திக்கின்ற தன்மையின் வேறுபாடுகள், உணருகின்ற உணர்த்துகின்ற உணர்த்தப் படுகின்ற அறிவு நிலை, பக்த நிலை, யோக நிலை, ஞான நிலை, படைப்பு நிலை இவைகள் அனைத்தின் உயர்வு தாழ்வுகளும், வேறுபாடுகளும், மாறுபாடுகளும், உன்னதங்களும், முழுமைகளும், குறைவுகளும், எளிமைகளும், வலிமைகளும் உயிருக்கு சொந்தமானதல்ல. இது ஆண்டவனுக்கும் சொந்தமானதல்ல. பிறப்புகளுக்கு மட்டுமே சொந்தம். இவைகள் ஒவ்வொரு வர்க்கத்தின் வழியாக விதவிதமாக பிறந்து வருகின்றன. இவைகளை மின்சார பல்புகளை ஒளிரச் செய்வதைப் போன்று உயிர் என்கின்ற ஆண்டவன் பிறக்கும்பொழுது கர்ப்பத்திற்குள் வந்து ஒவ்வொருவரின் தனித்தன்மைகளைப் பிரகாசிக்கச் செய்கிறான். இதுவே கர்ப்ப வேதாந்தம் என்கிறார் சதாசிவபிரும்மேந்திரர்.

7. இதற்குப் பின் பூமிக்கு வந்த மனிதன் கர்மம், பக்தி, யோகம், ஞானம், சிந்தனை, பொருளாதாரம் என்கின்ற காசு, காமம் என்கின்ற களி, அறியாமை என்கின்ற உயிருக்கு செய்கின்ற வஞ்சகம் இவைகளில் புகுகின்றான். இந்த செய்கைகளை மாற்றவே பக்திப்பிரச்சாரம், மதப்பிரச்சாரம், ஞானப்பிரச்சாரம் இவைகள் நடைபெறுகின்றன. கூடியவரையில் பெரிய அளவிலோ, சிறிய அளவிலோ மாறிய மனிதன் மாறட்டும். மாறாத மனிதனுக்காக கவலை கொள்கிறோம் என்கிறார்கள்.

8. பிறக்கின்ற மனிதர்களின் இத்தன்மைகள் உடலில் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? மூளைக்குள், மண்டை ஓட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கிறது. மண்டை ஓட்டின் அளவு, அதன் நீள அகலம், அதன் கொள்ளளவு, பெற்றோர்களின் வீரிய வேகம் இதுவே அதனளவு. தாயின் யோனிவாய் என்ற எலும்பினளவு இதை வைத்து குணங்களை செய்கைகளை அளந்து விடலாம். நன்மை தீமை அனைத்துமே ஆராய்ச்சியில் வெளிப்பட்டுவிடும். இம்மனிதன் மாறுவானா, மாறமாட்டானா என்று சொல்லிவிடலாம். இக்கொள்கையின் பெயரே வேற்றுமையில் ஒற்றுமை. ஒற்றுமையில் வேற்றுமை என்று இன்றைய உலகம் இருக்கிறதே ஒழிய உண்மையாய் இல்லை. ஆராய்ந்து பார்த்தால் அனைவரும் ஒற்றுமையாய் இருக்கின்றனர். அனைவரும் வேற்றுமையாய் இருக்கின்றனர். இதுவே உலக தத்துவம்.

9. பொருளாதார தத்துவத்துறையாலும்,சிந்தனை தத்துவத்துறையாலும், மதத்தத்துவத்துறையாலும், கடவுளைச் சொல்லி ஒற்றுமையை ஏற்படுத்துவதனாலும், செய்கின்ற ஒற்றுமைகளெல்லாம் ஒருவிதமான ஒற்றுமைகளே. மனித மண்டலம் கலங்கிவிடக் கூடாது என்பதற்காகவே இத்தத்துவங்கள் கையாளப்படுகின்றன.

10. மற்றபடி கடவுளை உணருவது, சிந்திப்பது, முழுமையடைவது, தானே உண்மையை உணருவது, பிரபஞ்சம் என்ற உலகோடு ஒன்றுபடுவது, கடவுள் என்ற பெரிய தத்துவத்தோடு இணைவது இதுவே மனிதனால் செய்யமுடியும்.

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது

மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# "ஆ(ம)ஹா பாரதம்"

## பாகம் 16

தாய் வினதா பந்தயத்தில் தோற்று அடிமையாக பல துயரங்களை அனுபவிப்பதைக் கண்டு கருடன் வருத்தம் அடைந்தார்.

ஒரு முறை கத்ரு "கடலுக்கடியில் இருக்கும் நாகலோகத்திற்கு என்னை அழைத்துச் செல்" என்றாள் வினதாவிடம். வினதாவும் சரியென கத்ருவை தன் முதுகில் சுமக்க, அவளது பிள்ளைகளான நாகங்களை கருடன் தன் முதுகில் சுமந்து சென்றனர்.

கருடன் சூரியனுக்கு அருகில் செல்ல, செல்ல சர்ப்பங்கள் சூரிய வெப் பத்தால் தாங்க முடியாமல் மூர்ச்சித்து விட்டன. தன் புதல்வர்களின் இந்த நிலையைக் கண்ட கத்ரூ இந்திரனைக்குறித்து துதி செய்தாள். "தேவர் தலைவா! சசியின் கணவர்! நீரே உலக சிருஷ்டி, சம்ஹாரம் செய்பவர். சூரியனும், அக்னியும் நீரே! புகழ்மிக்க வரே! ரிஷிகளால் துதிக்கப்படுபவரே!" என்றெல்லாம் புகழ்ந்து துதித்தாள்.

கத்ருவின் துதியில் மகிழ்ந்த இந்திரன் மேகங்களை அனுப்பி மழையைப் பெய்வித்தான். கருடன் மீது சவாரி செய்த நாகங்கள் மழையில் நீராடியபடியே ரமணீயகத் தீவிற்கு வந்து சேர்ந்தன. தேவர்களும் கந்தர்வர்களும் மிகவும் விரும்பக் கூடியதான அந்த் தீவினைக் கண்டு களித்த நாங்கள் கருடனிடம் "வேறு ஒரு அரிய இடத்திற்கு எங்களை அழைத்துச் செல்" என்றன.



கருடன் தன் தாயிடம் வந்து " இவர்களின் கட்டளையை நான் நிறைவேற்ற வேண்டிய காரணம் என்ன?" எனக் கேட்டார்

கருடனின் கேள்விக்கு வினதா நடந்த அனைத்து சம்பவங் களையும் மிகவும் வருந்தத்துடன எடுத்துக் கூறினாள். காரணத்தை அறிந்துக் கொண்ட கருடன் நாகங்களைப் பார்த்து "நாங்களே! உங்களுக்கு என்ன வேண்டும்?எத்தகைய வித்தைகளை சொல்லித் தர வேண்டும்? நானும், என் தாயும் எதனால் விடுவிக்கப்படுவோம்?

தாய் ஒருவர் அடிமைப்பட்டிருப்பதை காணும் மகனானவன் அவன் எத்தகைய வறுமையிலிருப்பவனோ, பலமற்றவனோ யாராக இருந்தாலும் அடிமைத் தளையை அறுத்தெறியத்தான் எண்ணுவான் எனும் போது பலம் பொருந்தியவர், மற்றும் பராக்கிரமசாலியாள கரு டன் பொறுத்துப் போவாரா? எது வேண்டு மானாலும் கேளுங்கள் என்று துணிந்து கேட்கிறார்.

அதைக் கேட்டதும் நாகங்கள் எங்க ளுக்கு அமுதம் வேண்டும். அதைக் கொடுத்து விட்டால் நீங்கள் விடுபடலாம் என்றன.

"நாகங்கள் விரும்பும் அமுதத்தைக் கொண்டு வர செல்கிறேன். தாயே ! எனக்கு ஆசிக் கூறுங்கள. மற்றும் வெகுதூரம் செல்ல வேண்டியிருப்பதால் வழியில் எனக்கு ஆகாரம் எங்கு கிடைக்கும் என்றும் தெரிவியுங்கள்" என்று கருடன் கூறியதும் வினதா பேசலானாள்.

"மகனே! கடலின் நடுவிலுள்ள ஒரு தீவில் நிஷாதர்கள் வாழுமிடம் உள்ளது. அங்குள்ள நிஷாதர்களை சாப்பிட்டு விட்டு செல். ஒரு போதும் பிராமணனைக் கொல்லாதே. பாபம் சேரும்" என்று வினதா கூறியதும்; கருடன் "பிராமணரை நான் எப்படி அடையாளம் காண்பது) என்பதை தெளிவாக எனக்கு தெரிவியுங்கள்.

மகனே ! நீ உண்ணும் போது உன் கண் டத்தில் பட்டால் எரிப்பவரும், மூங்கில் முள்ளை விழுங்கியது போல் இருப்பவர் பிராம்மணர் என்று அறிந்துக் கொள் என்று சொல்லி ஆசி கூறி அனுப்பி வைத்தாள்.

மிகப் பராக்கிரமசாலியான கருடன் ஆகா யத்தில் பறந்துச் சென்று நிஷாதர்களின் வாழ்விடத்தை அடைந்தார். இரு சிறகுகளால் நிஷாதர்களை அரவணைப்பது போல் பயமுறுத்தி, தன் வாய் பக்கமே ஓடி வரச் செய்து





ஆயிரக்கணக்கானவர்களை ஆகாரமாக்கிக் கொண்டு மீண்டும் வானில் பறந்தார்.

தன் கண்டத்தினுள் தாய் சொன்னது போல். எரிச்சலும், முள் தைப்பது போலும் இருக்க வாயைத் திறந்து "பிராம்மணனே! நீ வெளி யேறி விடு. பாவியாக இருந்தாலும் நான் பிராம்மணனை கொல்ல மாட்டேன்" என்றான் கருடன்.

அதற்கு அந்த பிராம்மணன் "நிஷாத இனத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவள் என் மனைவியாவாள். இவளும் என்னோடு வெளியேற நீ சம்மதித்தால் தான் நானும் வெளியேறுவேன்". என்று கூறினான்.

கருடன் "எனது ஜடாரக்கினியால் நீ இன்னும் ஜீரணமாகவில்லை. ஆதலால் விரைவில் வெளியேறி உன்னைக் காத்துக் கொள்" என்றான்.

அதைக் கேட்ட பிராம்மணன் மிக சந்தோஷத்துடன் வெளியே வந்து கருடனுக்கு ஆசிக் கூறிச் சென்றான்.

ஒன்றை கவனியுங்கள். பிராம்மணன் அந்தக் காலத்திலேயே கலப்புத் திருமணத்தில் கால் பதித்து விட்டான். கடலில் உள்ள மீன்களை உண்டு வாழும் நிஷாத இனத்திலிருந்து ஒரு பெண்ணை பிராம்மணன் விரும்பியிருக்கிறான். தனது தர்மத்திற்கு ஏற்ற ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பது மட்டும் மிகத் தெளிவாகிறது.

மேலும் கருடன் பாவியேயானாலும் பிராம்மணனை நான் கொல்ல மாட்டேன் என்று சொல்லக் காரணம் நிஷாதர் கூட்டத்தில் பிராம்மணனுக்கு வேலை என்ன? என்பதை உள்ளடக்கியது.

அக்காலத்திலேயே ஒரு சிறு தீவுக்குள்ளேயும் கூட பிராம்மணன் நிச்சயம் இருப்பான். அவன் இல்லாத இடமேயில்லை என்பதை முன்கூட்டியே தன் மகனுக்கு வினதா சொல்லியனுப்பியதிலிருந்து தெரிகிறது என்பது கூடுதல் செய்தி.

ஆகாய மார்க்கமாய் கருடன் மீண்டும் பறந்து சென்றுக் கொண்டிருக்கும் போதே தன் தந்தையான கச்யபரை தரிசித்தார். உடன் கீழிறங்கி வந்து அவரை நமஸ்காரம் செய்து நின்றார்.

அடுத்த இதழில்....

- Thali, Ph:09786223577





# நமக்கு கெமிக்கலை விற்பனை செய்பவர்கள் அங்கு வேப்பங்குச்சியை விற்று பணம் சம்பாதிக்கின்றனர்

உங்க பேஸ்ட்ல உப்பு இருக்க?, கரித்தூள் இருக்கா?, வேம்பு இருக்கா என்றுபல்வேறு கேள்விகளை கேட்டு தொலைக்காட்சியில் பல்வேறு விளம்பரங்கள் வருகின்றன.

இதே பல ஆண்டுகளுக்கு முன்பு...

இன்னுமா கரித்தூள், உப்பு, வேம்புல பல் துலக்குறீங்கன்னு ஏமாற்றும் வார்த்தைகளை கூறி பேஸ்ட்டை இந்தியாவில் அறிமுகப் படுத்தியவர்களே இன்றைக்கு உப்பு, கரித்தூள், வேம்பில் உள்ள இயற்கை மருத்துவமுறையை பார்த்து வியந்து போய் தங்களது பேஸ்ட்டிலும் மேற்கண்டவற்றை புகுத்தி மக்கள் தலையில் கிலோ கணக்கில் மிளகாய் அரைக்கின்றனர்.

அக்காலத்தில் பற்களைத் துலக்குவதற்கு எந்த பிரஷ்ஷும், டூத் பேஸ்ட்டும் இல்லை. நம் முன்னோர்கள் தங்களது பற்களைத் துலக்குவதற்கு சாம்பல், வேப்பங்குச்சி, ஆலமரக் குச்சி, அதிமதுரக் குச்சிகளைத் தான் பயன்படுத்தி வந்தார்கள். இதனால் தான் அவர்களுக்கு எந்த ஒரு ஈறு பிரச்சனைகளும், பல் பிரச்சனைகளும், ஏன் வேறு எந்த ஒரு ஆரோக்கிய பிரச்சனைகளும் வரவில்லை எனலாம்.

ஏனெனில் இயற்கை பொருட்கள் எதிலும் எந்த ஒரு கெமிக்கல்களும் இருப்பதில்லை. அதிலும் அக்காலத்தில் எங்கும் மரங்கள் இருந்ததால், தங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும்



வீணாக நினைக்காமல் நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் இன்று பற்களைத் துலக்குவதற்கு ஏகப்பட்ட டூத் பேஸ்ட்டுகள், டூத் பிரஷ்கள் விற்கப்படுவதோடு, அவற்றால் வாய் சுத்தமாகிறதோ இல்லையோ, வாய் பிரச்சனைகள் அதிகமாகத் தான் உள்ளது.

எனவே என்ன தான் நவீன உலகமானாலும், எப்போதுமே நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த பழக்கங்களை மறக்காமல் பின்பற்றி வந்தால், நிச்சயம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். பணத்தை மிச்சப்படுத்துவதுடன் ஆரோக்கியத்தையும் இழக்காமல் இருக்கலாம்.

அன்று நமக்கு பேஸ்ட்டை அறிமுகப்படுத்தி, நமது வேப்பங்குச்சியை கிண்டல் செய்தவர்கள், இன்று அதே வேப்பங்குச்சியை 2 டாலர் 3 டாலர் விலைக்கு வெளிநாடுகளில் விற்று வெளிநாட்டினரின் ஆரோக்கியத்திற்கு வழிகாட்டியாக திகழ்கிறார்கள். நமக்கு கெமிக்கலை விற்பனை செய்வது அவத்திலும் அவலமாகும்.

## ஈறு நோய்கள் :

வேப்ப மரக்குச்சியை மெல்லும் போது அதில் உள்ள ஆன்டிபாக்டீரியல் ஜூஸ்கள் ஈறுகளைத் தாக்கிய கிருமிகளை அழித்து வெளியேற்றிவிடும். ஈறுகளில் இரத்தக்கசிவு பிரச்சனை இருந்தால், மருத்துவரிடம் செல்வதற்கு முன், வேப்பங் குச்சியால் பற்களைத் துலக்கி வாருங்கள். இதனால் உங்கள் ஈறுகளில் இதுவரை இருந்த பிரச்சனைகள் முற்றிலும் அகலும்.

## சொத்தை பற்கள்:

பற்களைத் துலக்குவதற்கு வேப்பங்குச்சியை மெல்லும் போது, அதிலிருந்து வெளிவரும் சாறு பற்களை சொத்தை செய்யும் பாக்டீரியாக்கள் மற்றும் கிருமிகளை முற்றிலும் அழித்துவிடும். மேலும் தினமும் வேப்பங்குச்சியால் இரண்டு முறை பற்களைத் துலக்கி வந்தால், சொத்தைப் பற்கள் போய்விடும்.

## வாய் துர்நாற்றம்:

வாயில் கிருமிகள் அதிகம் இருப்பதனால் தான் வாய் துர்நாற்றம் வீசுகிறது. அத்தகைய கிருமிகளை முழுமையாக வெளியேற்றி, வாயை புத்துணர்ச்சியுடனும், துர்நாற்றமின்றியும் வைத்துக் கொள்ள வேப்பங்குச்சியால் தினமும் பற்களைத் துலக்குங்கள். முக்கியமாக தினமும் இரவில் படுக்கும் முன் வேப்பங்குச்சியால் பற்களைத் துலக்கினால் வாய் துர்நாற்றம் விரைவில் நீங்கும்.

## பல் வலி :

வேப்பங்குச்சியால் பற்களைத் துலக்கி வருபவர்களுக்கு, பல் வலி வரவே வராது. இதற்கு வேப்பங்குச்சியில் உள்ள சக்தி வாய்ந்த உட்பொருட்கள் தான் முக்கிய காரணம்.

## மஞ்சள் பற்கள் மற்றும் பற்காறை :

உங்களுக்கு பற்கள் மஞ்சளாகவும், பற்களின் பின் பற்காறைகள் இருந்தால், வேப்பங்குச்சியால் பற்களை தினமும் துலக்கி வாருங்கள். இதனால் அதில் உள்ள மருத்துவ குணங்களால், பற்களல் படிந்துள்ள மஞ்சள் கறைகள் நீங்குவதோடு, பற்காறைகளும் விரைவில் அகலும்.

## வாய்ப்புண் :

வாய்ப்புண் இருப்பவர்கள், வேப்பங்குச்சியால் பற்களைத் துலக்கி வந்தால், வாய்ப்புண் சீக்கிரம் குணமாகும்.

## வலிமையான பற்கள் :

வேப்பங்குச்சியால் தினமும் பற்களைத் துலக்கி வந்தால், பற்கள் வலிமையடையும். மேலும் வாயின் மூலை முடுக்குகளில் தங்கியுள்ள அனைத்து நச்சுக்களையும் முழுமையாக வெளியேற்றிவிடும்.

நமது குழந்தைகளுக்கும் இந்த முறையை கற்பித்து அவர்களின் தலைமுறையையாவது இயற்கையுடன் ஒன்றி வளர உதவியாக இயற்கையை அவர்களுக்கு எடுத்துரைப்போம்.



# காசியைக் காக்கும் கால பைரவருக்கு நிகரான சக்தி படைத்த

# தகட்டூர் பைரவர்



இறைவழிபாடு என்பது தொன்று தொட்டு நடைபெற்று வந்தாலும் ஒருசில காலங்களில் ஒருசில வகையான வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும். முக்கியமாகஞ். மக்கள் தேவைக்கு பூஜை செய்யும் காலமாக இந்த கலியுகம் விளங்குவதால், பொது நலனைவிட சுயநலத்துடன் செய்யும் வழிபாடுகள்தான் பெருகி வருகின்றன. மனித மனம் பல்வேறு விஷயங்களுக்கு அடிமையாகிவிட்டதாலும், போதும் என்ற மனப்பான்மை குறைந்து விட்டது.

யுகங்கள் நான்கு வகையாக உள்ளன. அவை, கிருதா யுகம், திரேதா யுகம், துவாபரயுகம், கலியுகம்.

இந்த நான்கு யுகங்களிலும் முதல் மூன்று யுகங்களில் மனிதனுடன் தெய்வத்தின் தொடர்பு நேரிடையாகவும், மறைமுகமாகவும் இருந்ததால், என்னதான் கொடியவனாக இருந்தாலும் தெய்வத்தின் மீது உள்ள பய பக்தியால் ஒருசில காரியங்களை மனிதன் செய்ய தயங்கினான்.

ஆனால் கலியுகத்தில் தெய்வத்தின் நேரடி தொடர்பும், மறைமுகத் தொடர்பும் இல்லாத தால், தெய்வத்தையே மறுத்துக் கூறும் துணிவு மனிதனுக்கு ஏற்பட் டுள்ளது.

தெய்வத்தை மறுக்கும் நிலை மனிதனின் இரத்தத்தின் சூடு குறையும் வரை (இளைய பருவம் முடியும்வரை) ஒருசிலருக்கு இருப்பதை கண் கூடாக பார்க்க முடியும். ஒருசில நிகழ்வுகளின் மூலமாகவும் அறிய முடியும். இரத்தத்தின் சூடு குறையும்போது, அடுத்தவர் தயவு தேவைப் படும்போது இறைவனை மனம் தானாக நாடிவிடும்.

கலியுகத்தில் மனிதனின் இரத்த சூட்டிற்கும் காரணம் உண்டு. கிருதாயுகத்தில் மனிதனின் ஆயுட்காலம் ஒரு லட்சம் ஆண்டுகள். திரேதா யுகத்தில் மனிதனின் ஆயுள் காலம் 10 ஆயிரம் ஆண்டுகள். துவார யுகத்தில் ஆயிரம் ஆண்டுகள், கலி யுகத்தில் 100 ஆண்டுகள்.

மேலும் கிருதா யுகத்தில் மனிதனின் உயிர் எலும்பில் இருந்ததாகவும், திரேதா யுகத்தில் மனிதனின் உயிர் நரம்பில் இருந்ததாகவும், துவாபர யுகத்தில் அவனது உயிர் ரத்தத்தில் இருந்ததாகவும், கலி யுகத்தில் உயிர், மூச்சு காற்றில் உள்ளதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

கலியுகத்தில் மனிதனின் உயிர், சுவா சிக்கும் காற்றில் உள்ளதால்,காற்றின் வீரியம் ரத்தத்தின் சூட்டை அதிகரித்து, 'தான்' என்ற அகம்பாவத்தை மனிதர்களிடம் அதி கரிக்கவைக்கிறது. இந்த 'தான்' என்ற மனப் பான்மையை அடக்கும் சக்தி, தியானம், யோகம், மூச்சுப்பயிற்சிக்கு உள்ளது.

இளமையும், ஆரோக்கியமும் உள்ள மனிதன் தன்னை தெய்வத்தைவிட உயர்வாக எண்ணி இருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட வயதை அடையும்போது, தானாகவே ஏதோ ஒருவித பயம் மனிதனை ஆட்கொள்கிறது, அந்த சமயத் தில் மனிதன் செய்த பாவச் செயல்கள் அவன் முன்வந்து நிற்பதால், அவற்றிற்கு நிவாரணம் வேண்டி அபரிமிதமான சக்தி வாய்ந்த தெய் வங்களை நாடுகிறான். (ஒருசில கடவுள் மறுப்பு கொள்கை உள்ளவர்கள் கூட வீட்டில் யாருக்கும் தெரியாமல் யாக பூஜை செய்வது சாட்சி) அபரிமிதமான சக்தியுள்ள பூஜைகளை செய்ய விரும்புகிறான்.

இதற்கு உதாரணம் பிரதோஷம் என்ற வழி பாடு தொன்று தொட்டு கடைபிடிக்கப்பட்டு வந்தாலும், சமீபமாக ஒரு 10 முதல் 15 வருட காலங்களில்தான் மிகவும் பிரபலமடைந்து வருகிறது.

இதைப்போன்று தற்போது அதிகமாக வழிபாடு நடைபெறுவது, தீய சக்திகளை அழிக்கும் பைரவ வழிபாடு. மக்கள் அஷ்டமி தினத்தை மிகப்பெரிய கெடுதலை அழிக்கும் தினமாகவே பார்க்கின்றனர்.

**காசியைப் போன்றே சக்தி வாய்ந்த பைரவத் தலம் தமிழகத்திலும் உள்ளது.**

வேதாரண்யத்தில் உள்ள தகட்டூர் என்ற இடத்தில் உள்ள பைரவர் தலம்,காசியில் உள்ள பைரவத் தலத்திற்கு நிகராக போற்றப்படுகிறது. இந்த ஊருக்கு இன்னொரு பெயரும் உள் ளது யந்திரபுரி, அதாவது இந்த ஊரில் இறை வழிபாட்டிற்குரிய யந்திரங்கள், தகடுகள் அதிகம் செய்த ஊர் என்பதால் காலப்போக்கில் தகட்டூர் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

காசியில் உள்ளது போன்றே சிவபஞ்சாட்சர யந்திரத்தின் மேல் மகாபைரவர் ஆளுகைக் குட்பட்டு விளங்குகிறது இத்தலம். இத்தலத்து மூர்த்தியாக பைவர் வீற்றிருக்கிறார். இத்தலத்தில் எப்போதும் வெம்மையும் ஆகர்ஷ்ணமும் நிறைந்து காணப்படுகிறது.

இராமாயணத்தில் இராவண வதம் முடிந்ததும், இராவணனைக் கொன்ற தோஷம் நீக்குவதற்கு இராமேஸ்வரத்தில் ஸ்ரீராமபிரான் சிவ பூஜை செய்வதற்கு லிங்கம் தேவைப்பட்டது.

சிவபூஜைக்கு தேவையான லிங்கத்தை எடுத் துவரும் பணி அனுமன் ஏற்றுக்கொண்டார். தனது வல்லமையை பயன்படுத்தி காசிக்கு சென்று லிங்கத்தை எடுத்துவர முற்பட்டபோது, காசியை காக்கும் பைரவர் அதற்கு அனுமதி தரமறுத்தார்.



கடைசியில் சிவபெருமானே நேரில் தோன்றி அனுமனுக்கு அனுமதி தர உத்தரவிட்டதாலும், சிவலிங்கத்தின் மீதிருந்த பக்தியாலும், அனுமன் எடுத்துச் செல்லும் லிங்கத்திற்கு பாதுகாப்பாக பைரவரே காசியிலிருந்து பாது காவலராக வந்ததாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு காசியிலிருந்து தமிழகத்திற்கு வந்த பைரவர் யந்திரபுரி என்று விளங்கிய தகட்டூரில் தங்கி சிவனை பூஜித்தார். இந்த பைரவரை வணங்கினால் காசி கால பைரவரை பூஜித்த பலன் கிடைக்கும்.

தகட்டூர் பைரவர் மிகுந்த சக்தி வாய்ந்தவராக விளங்குகிறார். மனோபலம், ரோகநிவர்த்தி, காரியசித்தி, சகல சம்பத்துக்களையும் அருளும் ஆற்றலுடன் திகழ்கிறார்.

## கால பைரவர் வரலாறு

தாருகாசுரன் என்பவன், இறவா வரம் வேண்டும் என, சிவனிடம் கேட்டான்.

உயிருக்கு இறப்புண்டு என்ற சிவன், ஏதோ ஒரு பொருளால் இறப்பை வேண்டும்படி அவனிடம் கூறினார். அவன் அகங்காரத்துடன், ஒரு பெண்ணைத் தவிர, தன்னை யாரும் அழிக்கக் கூடாது என்று வரம் பெற்றான். பலம் மிக்க தன்னை, ஒரு பெண் என்ன செய்துவிட முடியும் என்பது அவனது எண்ணம்.

பல அட்டூழியங்கள் செய்த அவனுக்கு அழியும் காலம் வந்தது. தேவர்கள் சிவ, பார்வதியிடம் முறையிட்டனர். பார்வதி தேவி, சிவன் விழுங்கிய ஆலகால விஷத்தில் இருந்து, கறை படிந்த ஒரு சுடரை உருவாக்கினாள். அந்தச் சுடர், ஒரு பெண்ணாக வடிவெடுத்தது. “காளம்’ (விஷம்) படிந்த அந்த பெண்ணுக்கு, “காளி’ என பெயர் சூட்டினாள்.

காளிதேவி கடும் கோபத்துடன் தாருகாசுரன் இருக்கும் திசைநோக்கி திரும்பினாள்.

அந்த கோபம், கனலாக வடிவெடுத்து, சூரனை சுட்டெரித்தது. பின், அந்த கனலை ஒரு கு ழ ந் தை ய ா க மாற்றிய காளி, அதற்கு பாலூட்டினாள். அதன் பின், சிவபெருமான், காளியையும், அந்தக் குழந்தையையும் தன் உடலுடன் ஐக்கியமாக்கிக் கொண்டார்.

அப்போது அவரது உடலில் இருந்து காளியால் உருவாக்கப்பட்டது போல, எட்டு குழந்தைகள் உருவாயின. அந்த எட்டையும் ஒன்றாக்கிய சிவன், அந்த குழந்தைக்கு, “பைரவர்’ என்று பெயர் வைத்தார். காளி, சிவன் ஐக்கியத்துடன், எட்டு மடங்கு சக்தியுடன், காலத்தை தன் உடலில் அடக்கிய அந்தக் குழந்தை, “காலபைரவர்’ என்ற திருநாமத்துடன், கைலாயத்தை காக்கும் பொறுப்பை கொடுத்தனர்.

## நாய் வாகனம்

வாழ்க்கையில் இன்ப துன்பம் எது வந்தாலும், அதை இறைவனிடம் அர்ப்பணிக்க வேண்டும் என, வேதங்கள் சொல்கின்றன. அவ்வாறான வேதத்திற்கு இன்னொரு பெயர் ஞாளி என்று கூறப்படுகிறது. நாய்க்கு, “வேதஞாளி’ என்ற பெயர் இருக்கிறது.நான்குவிதமான வேதங்களும் நான்குவிதமான நாய்களின் அவதாரத்தை எடுத்து தத்தாத்ரேயருடன் சுற்றித்திரிந்ததாக புராணங்கள் கூறுகின்றன. அவ்வாறான வேதத்தை தனது வாகனமாக ஏற்றார் பைரவர்.

அனைத்து சிவாலங்களையும் காக்கும் பொறுப்பு பைரவருடையது என்பதால், மாலை பொழுதில்தான் பைரவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும். ஒரு காலத்தில் சிவ பூஜை முடிந்ததும் சிவ சன்னதியை அடைத்து அத்தலத்திற்குன்டான் சாவியை பைரவரிடம் வைத்துச் செல்லும் வழக்கம் இருந்து வந்தது. காலையிலிருந்து மாலைவரை சிவசன்னதிகளை பூதகணங்கள் காவல் காக்கும், மாலையிலிருந்து காலை வரை பைரவர் காவல் காப்பார். இவருக்குரிய காலம் மாலை என்பதால் பைரவ பூஜைகள் பெரும்பாலும் மாலையில்தான் நடைபெறும். திருக்கோயில்களில் நடைபெறும் பூஜைகளில், இரவில் நடைபெறும் பூஜையும், காலையில் நடைபெறும் முதல் பூஜையும் பைரவருக்குண்டானது.

இவரை வழிபடுவதற்கு உகந்த திதி தேய்பிறை அஷ்டமி. அதில், கார்த்திகை அஷ்டமி மிகவும் உயர்ந்தது.

பைரவரை தினசரி வணங்கினாலும், அஷ்டமி திதிகளில் வணங்குவது சிறப்பாகும். அன்றைய தினம்அஷ்டலட்சுமிகளும் வழிபடுவதாக புராண, சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

அதனால்தான் ஒவ்வொரு மாதமும் வரும் தேய்பிறை அஷ்டமிக்கு சிறப்பு அடைமொழி கொடுத்துள்ளனர்.

சித்திரை ............................ ஸ்நாதனாஷ்டமி
வைகாசி ............................சதாசிவாஷ்டமி
ஆனி ..................................பகவதாஷ்டமி
ஆடி ................................. நீலகண்டாஷ்டமி
ஆவணி........................... ஸ்தாணு அஷ்டமி
புரட்டாசி ..............................சம்புகாஷ்டமி
ஐப்பசி .............................ஈசான சிவாஷ்டமி
கார்த்திகை ................... கால பைரவாஷ்டமி
மார்கழி ..............................சங்கராஷ்டமி
தை ..................................தேவதாஷ்டமி
மாசி...................................மகேஸ்வராஷ்டமி
பங்குனி .............................திரியம்பகாஷ்டமி.

இப்படி ஒவ்வொரு அஷ்டமி வழிபாடுகளுக்கும் தனிச் சிறப்புக்கள் உள்ளன.

## வழிபாட்டின் சிறப்புகள்

பால்,இளநீர், தேன் இவற்றால் யந்திரத்தை அபிஷேகம் செய்து, பீடத்தில் வைத்து சந்தனம், குங்குமம் வைத்து சிகப்பு அரளி மலர்களால் அர்ச்சனை செய்து, கிழக்கு முகமாய் அமர்ந்து தினம் 1008 வீதம் உரு ஜெபித்து பூஜிக்க வேண்டும். செய்வினை, சூனிய கோளாறுகள், பேய், பிசாசு, முனி, காட்டேரி போன்ற பாதிப்பிலிருந்து நீங்க யந்திரத்தை 108 உரு ஜெய பூஜை செய்து கையில் தாயத்தாக அணிந்து கொள்ளலாம். இவரின் அருள் இருந்தால் அஷ்ட சித்தியும் கைகூடும்.

பைரவர் சிவனது அம்சம் ஆவார். பைரவர் என்றாலே பயத்தை நீக்குபவர், அடி யார்களின் பாபத்தை நீக்குபவர் என்று பொருள். அஷ்டமியன்று பைரவ வழிபாடு செய்தால் கேட்ட வரம் எல்லாம் கிடைக்கும்.

படைத்தல், காத்தல், அழித்தல் அதாவது ஒடுக்குதல் ஆகிய முக்கிய இறையருள் தெழில்களை செய்து பல லட்ச உயிர்களையும் காப்பதால் அவருக்கு திரிசூலம் அதிகார ஆயுதமாக அளிக்கப்பட்டது. படைத்தல் தொழிலை உடுக்கையும், காத்தல் தொழிலை கையில் உள்ள கபாலமும், அழித்தல் தொழிலை உடலில் பூசிய விபூதியும் குறிக்கும்.

இந்த கடவுளே ஆனந்த பைரவராக உலகை படைக்கிறார். பின்னர் காலபைரவராக உலகை காக்கின்றார். அவருக்கு தகுந்த பூஜைகள் செய்தால் மட்டுமே திருப்தியடைந்து நம்மை இடுக்கண்களிலிருந்து காப்பாற்றுவார் என்றில்லை. எந்தவித பூஜைகள் செய்யாவிட்டாலும் கூட இக்கட்டான நேரத்தில் முழு மனதுடன் அவரை நினைத்தாலே கூட போதும். சந்தோஷத்துடன் உடனே செயல்பட்டு நம்மை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுவார்.

பற்றற்ற நிலையில் நிர்வாண கோலத்தில் பைரவர் வீற்றிருப்பதால் பைரவர் விக்ரகத்தை தொட்டு வணங்குதல் நாமே சென்று புஷ்பம் சாற்றுதல் ஆகியவை கூடாது.

சித்திரை, ஐப்பசி மாதங்களில் வரும் பரணி நட்சத்திர நாட்கள் ஸ்ரீபைரவருக்கு மிக உகந்த நாட்கள் ஆகும். ஞாயிறு முதல் சனி வரையிலான வாரத்தின் அனைத்து நாட்களும் ஸ்ரீபைரவரை வழிபட உகந்த நாட்கள்தான்.

ஆயினும், தேய்பிறை மற்றும் வளர்பிறை நாட்களில் வரும் அஷ்டமி திதி ஸ்ரீபைரவரை வணங்குவதற்கு மிக விசேஷமான நாட்களாக நடைமுறையில் உள்ளது.

பீட்ரூட்டை வெட்டி வேகவைத்து அந்த தண்ணீரில் கலந்த சாதம், தேனில் ஊறவைத்து உளுந்து வடை மற்றும் வடையை மாலையாக சாற்றுதல் வெண் பூசணிக்காய் வெட்டி பலியிடுதல், எலுமிச்சை சாதம் படைத்தல் போன்றவைகள் ஸ்ரீபைரவருக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள் ஆகும்.

மரண பயத்தை போக்குபவர். எம பயத்திலிருந்து பக்தர்களை காப்பவர் கால பைரவர். தமிழ்நாட்டில் சீர்காழி அருள்மிகு சட்டைநாதர் கோவில், உஜ்ஜயினி, தக்கோலம், காட்மாண்டு, திருமீயச்சூர், வேதாரண்யம் அருகே உள்ள தகட்டூர் சுயம்புபைரவர் ஆகிய தலங்களில் காலபைரவர் வழிபாடு சிறப்பாக நடக்கிறது.

## நவக்கிரக் தோஷம் தீர்க்கும் பைரவர்

ராகுகேது எனப்படும் பாம்புகளை பூனூலாகத்



தரித்தும், சந்திரனை சிரசில் வைத்தும், சூலம், மழு, பாசம், தண்டம் ஏந்தி காட்சி தருபவர் பைரவர். காலமே உருவான பைரவரின் திரு வுருவத்தில் பன்னிரெண்டு ராசிகளும் அடக்கம்.

மேஷ ராசி தலையிலும், ரிஷப ராசி வாயிலும், மிதுன ராசி கைகளிலும், மார்பில் கடகமும், சிம்ம ராசி வயிற்றிலும், இடையில் கன்னியும், துலா ராசி புட்டத்திலும், லிங்கத்தில் விருச்சிகமும், தனுசு ராசி தொடையிலும், முழந்தாளில் மகர மும், காலின்கீழே கும்பமும், அடித்தளங்கில் மீன ராசியும் உள்ளதாக சாஸ்திர, ஜோதிட நூல்கள் தெரிவிக்கின்றன. நவக்கிரக தோஷம் உள்ளவர்கள் பைரவரை வழிபட்டால் கிரக தோஷம் நீங்கும்.

தேய்பிறை அஷ்டமி நாள் செவ்வாய்க்கிழமை வருவது மிகவும் சிறப்பாகும்.அன்றைய தினம் பைரவரை வணங்கி பிரார்த்திக்க கடன் தொல்லை தீரும். மனஅமைதி, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கையில் காசு, பணம் புரளும். செல்வ வளம் உண்டாகும். தடைபட்ட சுபகாரியங்கள் இனிதே கூடிவரும்.

செவ்வாடை சாற்றி, சிகப்பு அரளிப்பூ மாலை போட்டு, வெல்லம் கலந்த பாயாசம், உளுந்து வடை, பால், தேன், பழம் வைத்து, வெள்ளை பூசணிக்காயில் நெய் விட்டு தீபம் ஏற்றி விபூதி அபிஷேகம் செய்து வழிபட சகல யோக பாக்யங்கள் கூடிவரும்.

## தேங்காய் மூடி விளக்கு

ஒரு முழு தேங்காயை உடைத்து அதில் குடுமி இருக்கும் பக்கம் பிய்த்தால் அதில் மூன்று கண் போன்ற அமைப்பு இருக்கும்.

அந்த கண் பக்கம் இருக்கும் மூடியில் ஐந்துவிதமான எண்ணெய். அதாவது, இலுப்பை எண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், பசு நெய் சேர்த்து திரி போட்டு விளக்கேற்ற சனி தோஷங்கள், ஏழரை சனி, அஷ்டம சனி தாக்கங்கள் நீங்கும்.

போட்டி, பொறாமை, வயிற்றெரிச்சல் மூலம் வரக்கூடிய தோஷம் கழியும். காத்து, கருப்பு, கெட்ட சேஷ்டைகள், துர் ஆவிகள் அண்டாது என்பது ஐதீகம்.

வெள்ளிக்கிழமை தேய்பிறை அஷ்டமி பைர வருக்கு மிகவும் உகந்த நாள். அன்றைய தினம் பைரவரை வணங்குவதால் லட்சுமி கடாட்சம் பெருகும்.

## முக்கிய பைரவ தலங்கள்

வைக்கம் பைரவர்: கேரளாவிலுள்ள வைக்கம் மகாதேவர் கோவிலில், கார்த்திகை தேய்பிறை அஷ்டமியை மகாதேவ வாஷ்டமி என்ற பெயரில் விமரிசையாக நிகழ்த்துவர். அந்த நாளில், இங்கு அன்னதானம் செய்தால் பெரும் புண்ணியம் கிடைக்கும். இப்போதே பதிவு செய்தால், சில ஆண்டுகளுக்குப் பின் தானம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மொட் டைக்கோபுரம் அருகில் உள்ள பைரவர் சக்தி வாய்ந்தவர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி திருநோக்கிய அழகியநாதர் கோவிலில் உள்ள பைரவர், இரட்டை நாய்களுடன் காவல் செய்கிறார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் தலத்தில் ஸ்ரீ கோட்டை பைரவர், கால பைரவ அம்சமாக இருந்து அருள்பாலிக்கிறார். சிவபெருமான் அவ தாரம் கொண்டதாக ஆகமங்கள் இயம்புகின்ற கோட்டை பைரவரிடம் வேண்டுதல் செய்வோருக்கு கைமேல் பலன் கிடைக்கும்.

திருமெய்யம் கோட்டை பைர வருக்கு





சந்தனாதி தைலம் சாற்றி அபி ஷேகம் செய்து சந்தனக்காப்பு, வடைமாலை சாற்றி வழிபட்டால் வியாபாரம், தொழில் போன் றவற்றில் அபி விருத்தி ஏற்படும்.

## பைரவ காயத்ரி மந்திரம்:

ஓம் ஷ்வானத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தன்னோ பைரவ ப்ரசோதயாத்.

## காசிக்கு சென்ற பலன்:

பைரவரை காசியில் தரிசிப்பது மிகுந்த பலன் கிடைக்கும். காசிக்கு செல்ல முடியாதவர்கள் தகட்டூரில் வீற்றிருக்கும் பைர வரை வணங்கினால் காசியில் தரிசனம் செய்த பலன் கிடைக் கும். காசியில் உள்ளது போன்ற அமைப்பே தகட்டூரில் உள்ளது.

கிர்த யுகத்தில் ஞானம் பெற் றால் முக்தி கிடைக்கும். திரோத யுகத்தில் யாகம் செய்தால் முக்தி கிடைக்கும். துவாபர யுகத்தில் தான, தருமங்கள் செய்தால் முக்தியைப் பெறலாம். கலி யுகத்தில் பக்தி செய்தால் மட்டுமே முக்தியை அடைய முடியும் என்கிறது கந்தபுராணம்.

இதன்காரணமாகத்தான் ஒருசில இடங்களில் அபரிமித மான புண்ணியம் கிடைக்கும் திருத்தலங்கள் இருந்தாலும், அத்திருத்தலத்திற்குநிகரான சக்தியை, உலகின் பல இடங் களில் உள்ள திருத்தலங்களில் உள்ள கடவுளை வணங்கினால் கிடைக்கும் என்ற நியதியை நமது முன்னோர் வகுத்தனர். (அக்காலத்தில் நிலவிய போக்கு வரத்து பிரச்சனை, வயது பிரச் சனை போன்றவற்றிற்காக) அந்த வகையில் காசிக்கு சென்று சிவனையும் பைரவ ரையும் வணங்க முடியாதவர்கள் தகட்டூர் வந்து பலனை பெறலாம்.

– ஆசிரியர் நாகராஜன்,
போன் 08825844033

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# தனது ஆத்மா தான், மற்றவைகளாக இருக்கிறது என்று நம்புகிறவன் எவனுக்கும் கோபம் மோகம் வரவே வராது



எனது சொல், எனது செயல், எனது புத்தி, எனது மனம் என்று நிறைய எனது இருக்கிறது. அவையெல்லாம் எனதே தவிர நான் அதுவல்ல பிறகு நான் என்பது உடலா? என் உடலென்று உடலையும் என்னையும் பிரித்து சொல்கிறேனே தவிர நானே உடல் அல்ல என்ற உணர்ச்சி எனக்கு தெளிவாக இருக்கிறது. உடல் நான் அல்ல எனும் போது உயிர் மட்டும் நானாகவா இருக்கப் போகிறது. அதையும் எனது உடமை போல எனது என்று தானே குறிப்பிடுகிறேன். எனவே உயிர் என்பதும் நான் அல்ல. பிறகு எது தான் நான் என்பது.

நான் என்பது உடலும் அல்ல, உயிரும் அல்ல. என்று நான் மட்டும் உணரவில்லை. நீங்களும் உணருகிறீர்கள் பகவான் கண்ணனும், இந்த உணர்ச்சியை தான் உண்மை என்று கூறுகிறான். ஆனால் உண்மையில் நான் என்பது உடலோ, மனமோ, புத்தியோ, ஆத்மாவோ ல்ல எனும் போது வேறு எதுவாகத்தான் இருக்கும் என்ற சிக்கல் நம் முன்னால் வந்து நிற்கிறது.

ஆத்மா, பரமாத்மா என்று கூறுகிறோம். ஆத்மா என்றால் நம்மை போன்ற மனித ஜீவன்கள் மற்ற உயிர்வகைகள் என்பது தெரியும். பரமாத்மா என்றால் கடவுள் என்பதும் நமக்கு தெரியும். அதனால் தான் உயிர்களை ஜீவாத்மா என்று அழைத்தோம். உண்மையில் நாம் என்பது, ஆத்மாவும் அல்ல என்றாலும் மிக நுணுக்கமான முறையில் ஆழ்ந்து சிந்திக்கும் போது ஆத்மாவின் இருப்பு நிலை தான், நான் என்பது என்று உணர முடிகிறது.

அதன்படி பார்த்தால் மனிதனது உண்மையான உருவம், உண்மையான இயல்பு, உண்மையான நான் ஆத்மா தான் என்ற முடிவிற்கு வேறு வழியில்லாமல் வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். காரணம் நமது அறிவு என்பது பூரணம் நிறைந்தது அல்ல. அதற்கு ஒரு எல்லை இருக்கிறது. அந்த எல்லையை மீறி நம்மால் சிந்திக்க இயலாது. ஆயிரம் தான் எனது ஆத்மா என்று கூறும் போது நாமும், ஆத்மாவும் வேறு வேறான தாத்பர்யம் தெரிந்தாலும் கூட அதையும் தாண்டி சிந்திக்கும் ஆற்றல் நமக்கு இல்லை என்பதனால் ஆத்மாவின் உணர்ச்சியே நான் என்ற முடிவிற்கு வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். இது குழப்பமான விஷயம் தான். ஆரம்பத்தில் குழப்பமாகத்தான் தெரியும். ஆனால் உணர்ச்சி குதிரையை உள்முகமாக தட்டி விட்டு பயணப்பட்டால் சரியான கருத்து என்பதாகத்தான் தோன்றும்.

இந்த கருத்தை நம்புகிறவன் இது தான் உண்மை என்று விடாப்பிடியாக பற்றி கொள்கிறவனுக்கு, விசாலமான இன்பம் இருக்கிறது. இந்த கருத்தின்படி ஆத்மாவை தான் என்று கருதுபவன் எல்லா உயிர்களிலும் தன்னைப்போலவே ஆத்மா இருப்பதை காண்கிறான். கைகளுக்குள் அடங்கிவிடும். சின்னஞ்சிறிய சிட்டு குருவியும் ஆறடி அகலத்தில் பருத்து கிடக்கும் பருந்தும் தன்னைப் போலவே ஒரு ஆத்மாவென்று கருதுகிறான். ஓயாது அலையடித்து கொண்டே இருக்கும் நீலநிற கடலும், ஓங்கி உயர்ந்து வானத்தை முத்தமிடுவது போலிருக்கும் மலையும், மலைமுகடும் பார்க்குமிடம் எங்கும் பசுமையாக பரந்திருக்கும் புல்வெளியும், அதில் ஊர்ந்து செல்லும் சின்னப்புழுவும் தானே தன்னை போன்ற ஆத்மாவை என்று ஆனந்த களிப்படைகிறான்.

மேலும் உலகிலுள்ள அனைத்து ஆன்மாக்களும் குணத்தால் ஒன்று என்பதனால், மனிதன் தனக்கும் மற்றவைகளுக்கும் வித்தியாசம் காண வேண்டிய அவசியமே இல்லை. காரணம் அவன் அனைத்தையும் தான் என்பதாகவே பார்கிறான். இதை தான் மகாகவி சுப்ரமணிய பாரதி

வானில் பறக்கின்ற புல்லெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்
கானிழல் வளரும் மரமெல்லாம் நான்
காற்றும் புனலும் கடலும் நான்

என்று அழகுற பாடுகிறான். எல்லா உயிர்களையும் ஒன்றாக, ஒரே தரமாக நினைக்கின்ற எவனுக்கும் ஆசை இருக்க முடியாது. ஏனென்றால் தனக்கு அந்நியமாக ஒரு பொருளுமே இல்லாத போது அடைய வேண்டியது என்று எது இருக்கிறது. அனைத்தையும் தன்னைப்போல உணருகிற எவனுக்கும் பயம் என்பது எள்முனை அளவு கூட இருக்க வாய்ப்பில்லை. நமக்கு அந்நியமாக இன்னொன்று இருப்பதாக இருந்தால் தானே அதை பார்த்து அச்சம் வரும். எல்லாமே நாம் என்கிற போது. எதைபார்த்து பயப்படுவது.

தனது ஆத்மா தான், மற்றவைகளாக இருக்கிறது என்று நம்புகிறவன் எவனுக்கும் கோபம் மோகம் வரவே வராது. நாம் வெறுக்க வேண்டிய அல்லது நேசிக்க வேண்டிய பொருளென்று தனித்து ஏதாவது இருந்தால் தானே

இவைகள் வரும். என் மீதே நான் கோபம் கொள்ள முடியுமா? என்னையே நான் மோகிக்க முடியுமா? எல்லாமே ஒரே ஆன்மா என்று கருதுகிற போது துக்கம் மறைகிறது. துயரம் காணமல் போகிறது. முழு மகிழ்ச்சியோடு இருக்கிறோம். ஏனென்றால் நமக்கு கவலை தருகின்ற அம்சமென்று உலகில் எதுவுமே கிடையாது. இப்படிப்பட்ட மனிதனுக்கு ஈடுயினை என்ன இருக்கிறது. இப்படி ஒருவன் இருந்துவிட்டால் அவனே சர்வ சக்தி கொண்ட கடவுள். அவனே சகலத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட பரப்பிரம்மம். இது தான் ஒரு மனிதனின், ஒரு ஆத்மாவின் நாம் என்பதின் உண்மை லட்சணம். உண்மை சொரூபம் என்று இந்துமத சாஸ்திரங்கள் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் இந்த நிலையை நாம் பார்க்கிறோமா? இப்படிதான் வாழ்கிறோமா? என்பதை சிந்திக்க வேண்டும்.




நமது உடலையும், மன சாட்சியையும் வேறு வேறாக பிரியுங்கள். இரண்டையும் நீதி மன்ற கூண்டில் ஏறி நிற்க விடுங்கள். ஒன்றை ஒன்று பார்த்து உண்மையான கேள்விகளை கேட்கவையுங்கள். நிச்சயமாக சர்வ நிச்சயமாக நமது ஆத்மாவை உலகம் தழுவியதாக காணும் பொருள் ஒவ்வொன்றும் நாமாக நமக்கு அந்நியம் இல்லாததாக கருதுகிறோமா? அப்படி ஒரு எண்ணம் நம் மனதில் மூலை முடுக்கில் எங்கேயாவது கிஞ்சித்தேனும் மறைந்திருக்கிறதா? என்று கேள்விகள் கேட்டோமேன்றால் சத்தியத்திற்கு புறம்பாக ஆமாம் என்ற பதிலை நம்மால் கூற இயலாது.

குழந்தையாக, சிறுவனாக, இளைஞ னாக, முதியவனாக கணந்தோறும் மாறிக்கொண்டிருக்கின்ற, அழியப் போகின்ற உடலையே உடலை மட்டுமே நாம் நாமாக நினைத்து கொண்டிருக்கின்றோம். நம்மால் உடலை தவிர்த்து வேறு எதையும் நினைக்க முடியவில்லை. பாமரர்களாகிய நாம், நான் என்பது ஆத்மா அல்ல. உடம்பே என்று உறுதியாக நம்புகிறோம். இது இல்லை என்று நம்மால் மறுக்க இயலாது. அப்படி மறுத்தால் நமக்கு நாமே பள்ளம் பறித்து கொள்வதில் வல்லவர்களாக இருப்போம் என்பதே சரியானதாகும்.

மனமும், அந்த மனம் ஆழ்ந்து கூர்மையாக செல்லும் போது உருவாகும் அறிவும், உடலில் உள்ள ஒரு பகுதியே ஆகுமென்று நமது இந்து மதம் அசைக்க முடியாத நம்பிக்கையை கொண்டிருக்கிறது..

ஆனால் மற்றவர்கள் மனதிற்கும், அறிவிற்கும் முக்கியத்துவம் தருகிறார்கள் விஞ்ஞானமும் மருத்துவமும் வேறு சில மெய்ஞானிகளும் இப்படியே தான் கருதுகிறார்கள்.

நம் மதம் மனதையும், அறிவையும் உடலோடு சம்மந்தபடுத்துவது ஏன் என்று கேள்வி நமக்கு வரலாம். உடல் என்பது அழியக்கூடியது, மாறக்கூடியது ஒரு சமயத்தில் ஒன்றாகவும், வேறொரு சமயத்தில் வேறொன்றாகவும் இருக்க கூடியது. மனமும் புத்தியும் அப்படித்தான் மாறிக்கொண்டே இருப்பது மாறுகின்ற இயல்புடைய எதுவும் நிரந்தரமாகாது. ஆனால் ஆத்மா என்பது நான் என்பது மாறாதது நிலைபிரளாதது

உடல் அழியக்கூடியது என்பதனால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையா? அதன் தேவைகளை கவனிக்க வேண்டிய நிர்பந்தம் கிடையாதா? என்றால் நிச்சயமாக ஆத்மாவை போல உடலும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு வஸ்துவே ஆகும். உடலை அலட்சியபடுத்தினால், உடலை சார்ந்திருக்கின்ற ஆத்மாவும் அலட்சியப்படுத்தபட்டதாகும். மலர் இல்லாமல் வாசனை இல்லை. நிலவு இல்லாமல் குளிர்ச்சி இல்லை. உடல் இல்லாமல் ஆத்மா என்ற உணர்ச்சி இல்லை. எனவே தான் திருமூலர் உடலை வளர்ப்பதும், உயிரை வளர்ப்பதும் இறைவனுக்கான செயலே என்றார். ஆத்மாவை வளர்க்க, ஆத்மாவை இறைவனது பாதங்களில் கொண்டு சேர்க்க, உடல் என்பது ஒரு தெப்பமாக பயன்படுகிறது. எனவே உடலை அலட்சியபடுத்த வேண்டிய அவசியமில்லை. அதே நேரம் உடல்தான் பிரதானம் என்ற உணர்வும் தேவையற்றது.

ஒரு குடும்பத்தில் தாய், தகப்பன், அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மனைவி குழந்தைகள் இருப்பது போல ஆத்மா என்ற ஒன்று நிலைப்பதற்கு மனம், புத்தி, உடம்பு என்ற மற்ற உறுப்புகள் தேவைப்படுகிறது. நானும், என் மகனும் ஒரே இரத்தம் என்றாலும் நானும், அவனும் ஒன்றாகிவிடுவோமா? அவன் உணர்வுகள் வேறு. என் உணர்வுகள் வேறு. அதே போலதான் ஆத்மாவும், உடம்பும் தெரிந்தோ தெரியாமலோ ஆத்மாவின் ஒரு அங்கமாக உடம்பு வந்துவிட்டது.

அதனால் உடம்பை பற்றிய துயரங்களும், ஆத்மாவை தொடர்கிறது. உடலுக்கு வருகின்ற துயரங்களை ஆத்மா தனக்கு வந்ததாக கருதி வீணாக மயக்கமடைகிறது. இது தான் மாயை என்ற பம்பர கயிறு ஆத்மாவை ஆட்டி வைக்கிறது என்று முன்பே சொன்னேன்.

இப்போது நீங்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள். ஆத்மா, மாயை, மனம், புத்தி, உடம்பு இவையெல்லாமே ஆண்டவனின் அம்சங்கள். எதிலிருந்தும் எதையும் பிரிக்க முடியாது என்ற முடிவிற்கு வந்திருப்பீர்கள். நான் என்பது ஆத்மா மட்டுமே என்று கூறி மனதையும், புத்தியையும், உடம்பையும் உதாசீனப்படுதினால் கிடைக்க கூடிய லாபமென்று எதுவுமே இல்லை. ஆத்மா வேறு. உடல் வேறு என்றால் இறந்து போன அன்னையின் உடலை வைத்து கொண்டு ஆத்ம பக்குவம் பெற்ற பட்டினத்தாரும், ஆதிசங்கரரும் அழுது புலம்பியது ஏன்? இறந்தது உடல் மட்டும் தான். ஆத்மா அல்ல என்று அவர்கள் மகிழ்ந்திருக்கலாமே அன்னையின் மென்னுடல் விறகில் கிடந்தது அவதியடையக் கூடாது என்று வாழை மட்டையை வைத்து பட்டினத்தார் சிதை மூட்டினாரே அவருக்கு ஆத்ம பரிபக்குவம் இல்லையா என்ன?

எனவே கொள்கைக்காகவோ, தத்துவங்களுக்காகவோ நான் என்பது ஆத்மாவே தான் என்று அடித்து கூறினாலும், உண்மையில் இந்து மத கொள்கைபடியும், யதார்த்தமான நடைமுறைபடியும் நான் என்பது ஆத்மாவையும், உடலையும் இணைத்து காட்டும் ஒரு குறியீடு தான் என்பதை மறுக்க முடியாது. இந்த கண்ணோட்டத்தோடு பார்த்தால், சாதாரண மனிதனின் நடத்தைக்கும், ஞானிகளின் நடத்தையிலும் உள்ள வித்தியாசம் மிக தெளிவாக தெரிந்துவிடும். சாதாரண மனிதன் இறுதி வரை உடம்பு தான் ஆத்மாவென்று துன்பத்தில் கிடந்து சாகிறான். அதனால் உடல் அடைகிற துன்பமெல்லாம் நிஜமென்று கருதி வெந்து மாய்கிறான்.

ஞானி தெளிவடைந்து இருக்கிறான். அவனுக்கு ஆத்மாவையும் தெரியும். உடலையும் தெரியும். தீயினால் உடம்பு சுடப்பட்டால் வலியால் துடிக்கும் ஞானி, இந்த வலி சரீரத்திற்கே தவிர, ஆத்மாவுக்கு அல்ல.

ஆத்மா என்பது எப்போதுமே ஊனப்படாது என்று தெளிவாக தெரிந்து வைத்திருக்கிறான். இதனால் ஞானியின் துயரம் சில நிமிடங்களில் கற்பூரம் போல மறைந்து போகிறது. சாதாரண மனிதனின் துயரம் தான் நீண்டுகொண்டே இருக்கிறது. அதனால் தான் முன்னோர்கள் சொன்னார்கள். உன்னையே நீ அறிந்து கொள் என்று. உன்னை நீ அறிந்து கொண்டால், நீ யார் என்பதை தெரிந்து கொண்டால் உனக்கு என்றுமே துன்பமில்லை.

உன்னை நீ அறிந்துகொள்ள உனக்கு அரிதாரம் பூசாதே. நான் இந்த இனத்தை சேர்ந்தவன். நான் இந்த மதத்தை சேர்ந்தவன். நான் இந்த மொழியை பேசுகிறவன் என்று உனக்குள் வட்டத்தை போட்டு கொண்டிருந்தால் உன்னை அறிய உன்னால் ஒருபோதும் முடியாது.

வட்டத்தை விட்டு வெளியே வா கருத்தளவில் உன்னை பிணைத்திருக்கும் விலங்குகளை உடைத்து போடு. கொள்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் எதுவும் உன்னை சிறைப்படுத்தாமல் பார்த்து கொள். தண்ணீரில் விழுந்த மாம்பழம் எப்படி சுத்தமாக மாறிவிடுமோ அப்படி உன்னை ஸ்படிகம் போல் ஆக்கி கொள். அப்போது உன்னை பற்றி சிந்தி. உனக்குள் இருக்கும் நீ தெளிவாக தெரிவாய்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

“ஆன்மிகமலர் மெயில் புக்” அனைத்தையும்
aanmeegamalar.com இணையதளத்தில்
இ-புத்தகம் பகுதியில் படித்து பயன்பெறலாம்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# பல பிரச்சனைகளை தீர்க்கும் சீரகம்

தினமும் தண்ணீருடன் சிறிது சீரகத்தைப் போட்டு நன்கு கொதிக்க வைத்து 'சீரகக் குடிநீர்' தயார் செய்து வைத்துக் கொள்ளவும். இதை, நாள்முழுவதும், அவ்வப்போது பருகி வர, எந்தவித அஜீரணக் கோளாறுகளும் வராது. நீர்மூலம் பரவும் நோய்களைத் தடுக்கலாம். பசி ருசியைத் தூண்டும் தன்மையும் ஆகும் இந்தச் சீரக நீர்.

சிறிது சீரகத்தை மென்று தின்று ஒரு டம்ளர் குளிர்ந்த நீரைக் குடித்தால் தலைச்சுற்று குணமாகும்.

மோருடன் சீரகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்துப் பருகினால் வாயுத் தொல்ல நீங்கும்.

சீரகத்தை இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறில் கலந்து ஒருநாள் ஊறவைத்துக் கொள்ளவும். இதை, தினம் இருவேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டு வர, பித்தம் மொத்தமாகக் குணமாகும்.

சுக்கு, சீரகம், மிளகு, திப்பிலி ஆகியவற்றைப் பொடித் தேனில் கலந்து சாப்பிட்டால் எல்லா உடல் உள்உறுப்புகளையும் சீராக இயங்கச் செய்வதோடு, கோளாறு ஏற்படாது தடுக்கும். எனவே, வாரம் ஒருமுற தடுப்பு முறையாகக் கூட (Prophylactive) இதைச் சாப்பிடலாம்.

உடலுக்கு குளிர்ச்சியும், தேகத்தைப் பளபளப்பாக வைக்கும் ஆற்றலும் சீரகத்திற்கு உண்டு. எனவே, தினம் உணவில் சீரகத்தை ஏதாவது ஒரு வழியில் சேர்த்துக் கொள்வோம்.

திராட்சைப் பழச்சாறுடன், சிறிது சீரகத்தைப் பொடித்திட்டு, பருகினால், ஆரம்பநிலை இரத்த அழுத்த நோய் குணமாகும். மத்தியதர இரத்த அழுத்த நோய் இருப்பவர்களுக்கு, மேலும் இரத்த அழுத்தம் அதிகரிக்காது தடுக்கும்.

சிறிது சீரகம், நல்லமிளகு பொடித்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, அந்த எண்ணெயத் தலையில் தேய்த்துக் குளித்தால், கண் எரிச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும்.

அகத்திக்கீரையுடன், சீரகம், சின்னவெங் காயம் சேர்த்து கஷாயம் செய்து அத்துடன் கருப்பட்டி பொடித்திட்டு சாப்பிட்டால், மன அழுத்தம் மாறும். ஆரம்பநில மனநோய் குணமாகும்.

சீரகம், சுக்கு, மிளகு, தனியா, சித்தரத்தை இவ்வைந்தையும் சேர்த்துத் தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு சிட்டிகை வீதம், தினம் இரண்டுவேளையாக சாப்பிட்டால், உடல் அசதி நீங்கி, புத்துணர்ச்சி ஏற்படும்.

சீரகத்தை லேசாக வறுத்து, அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொருமல் வற்றி, நலம் பயக்கும்.

சீரகத்துடன், மூன்று பற்கள் பூண்டு வைத்து மைய்ய அரைத்து, எலுமிச்சை சாறில் கலந்து குடித்தால், குடல் கோளாறுகள் குணமாகும்.

ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதி போக்கு நிற்கும்.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப் படுதல் நோய்க்கு, சிறிது சீரகத்துடன் சின்ன வெங்காயம் வைத்து மைய்ய அரைத்து, பசும்பாலில் கலந்து குடித்து வர, நல்ல பலன் கிடக்கும்.

சிறிது சீரகத்துடன், கீழாநெல்லி வைத்து அரைத்து, எலுமிச்சை சாறில் சேர்தது்ப் பருகி வர, கல்லீரல் கோளாறு குணமாகும்.

சீரகத்தை தேயிலைத் தூளுடன் சேர்தது கஷாயம் செய்து குடித்தால் சீதபேதி குணமாகும்.

கொஞ்சம் சீரகமும், திப்பிலியும் சேர்த்துப் பொடித் தேனில் குழைத்து சாப்பிட்டால், தொடர் விக்கல் விலகும்.

மஞ்சள் வாழைப் பழத்துடன், சிறிது சீரகம் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# நாக தோஷமும் பரிகாரமும்



நாக தோஷத்தை உருவாக்குபவர்களில் முதன்மை பெற்றவர்கள் ராகு கேது பகவான்கள். சப்த ரிஷிகளில் ஒருவரான மரீஷி மகரிஷியின் மகன் காசிப முனிவர்.

அவர்தம் பேரனாக அசுர வம்சத்தில் அவதரித்தவர் சுவர்பானு இவர் சகல கலைகளையும் கற்று வளர்ந்தார்.

இந்நிலையில் தேவர்களும் அசுரர்களும் சாகாவரம் தரும் அமிர்தத்திற்காக ஒன்றிணைந்து பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்றனர். தீய எண்ணம் கொண்ட அசுரர்களை அமுதம் உண்ணாமல் செய்வதற்காக திருமால் மோகினி அவதாரம் எடுத்து அசுரர்களைத் தனது அழகினால் மயக்கி, தமக்கு கட்டுப்படச் செய்தார்.

அமரர் ஒரு பந்தியிலும், அசுரர் ஒரு பந்தியிலும் அமரச் செய்து, அமுதத்தை தேவர்கள் மட்டும் அருந்துமாறு பரிமாறிக் கொண்டே வரும் போது, அமிர்தம் தீரும் தருவாயில் அதை சுவர்பானு கவனித்து அசுரர் பந்தியிலிருந்து எழுந்து சென்று தேவர்களுக்கிடையே அமர்ந்து அமுதத்தையும் உண்டு விட்டான். இதனை கவனித்து சூரியசந்திரர்கள் திருமாலிடம் சைகையால் தெரிவிக்க, மோகினித்திருமால் அவனது தலையைத் துண்டித்து விட்டார். ஆனால் அமுதம் உண்டபடியால் அழியாத்தன்மை பெற்ற சுவர்பானு, தலை வேறு உடல் வேறாகக் கிடந்தான். திகைப்புற்ற தேவர்கள் பிரம்ம தேவரை வேண்ட, அவர் சுவர்பானுவின் தலைக்கு நாகத்தின் உடலையும், தனித்துக் கிடந்த உடலில் நாகத்தின் தலையையும் பொருத்தினார்.

மனித தலையும் நாக உடலும் அமைந்த உருவத்திற்கு ராகு என்ற பெயரும், மனித உடல் நாக தலையும் அமைந்த உருவத்திற்கு கேது என்ற பெயரும் கொடுத்து , வேதங்களைக் கற்றறி யச் செய்து ஞானம் பெறச் செய்தார். அவர்களை கிரக மண்டலத்தில் பங்கு பெறச் செய்தார். நவகிரக பரிபாலனத்தில் அப்பிரதட்சணமாக (வலமிருந்து இடமாக) சுற்றி வரும்படி பணித்தார்.

அவர்களின் வேண்டுகோளின்படி ராகுபகவானை போக யோக காரகத்துவம் கொண்டவராகவும் , கேது பகவானை ஞானமோட்ச காரகத்துவம் கொண்டவராகவும் வரமளித்து நவகிரக பரிபாலனத்தில் இணைத்தார். ஒருவரான இருவர் இன்பமாய் கடமையாற்றி வருகின்றனர். இத்தகைய ராகுகேது பகவான்கள் உருவாக்கும் தோஷமே



ஆன்மிகமலர் மெயில் புக்



நாகதோஷமாகும்.

லக்னத்தில் ராகு இருப்பது நாக தோஷம்.

மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், கன்னி இவற்றில் ஒன்று லக்னமாக இருந்து அதில் ராகு சுபர் பார்வையுடன் இருந்தால் நீண்ட ஆயுள், வசதியான வாழ்க்கை அமையும்.

சுபர் பார்வை இல்லை எனில் புத்ர பாக்யத் தடை, உடல் நலக்குறைவு, வேதனை யுடன் கூடிய வாழ்க்கை அமையும் லக்னத்தில் கேது இருப்பது நாக தோஷமாகும். இருப்பினும் துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் ஆகிய ஒன்று லக்னமாக இருந்து அதில் சுபர் பார்வையுடன் கேது இருந்தால் நீண்டஆயுளுடன் கூடிய வசதி நிறைந்த வாழ்க்கை அமையும். சுபர் பார்வை இல்லை எனில் புத்ர பாக்யத்தடை, உடல் நலக்குறைவு, வேதனை யுடன் கூடிய வாழ்க்கை அமையும்.

லக்னம், 2மிடம் ,4மிடம் , 5மிடம், 7மிடம் இவ்விடங்களில் ராகு கேது அமைவது நாக தோஷமாகும். இதனால்திருமணத்தடை யும், குழந்தை பாக்கியம் இல்லாமல் இருப்பதும், வறுமையும், குடும்பத்தில் குழப்பமும் ஏற்படும்.

5 ல் ராகு எனில் பூர்வ புண்ய இல் லாதவன், நாகதோஷம் . ஆனால் சூரியன் பார்த்திருக்க தீர்க்காயுள், தனம், யோகம். வெளிநாட்டு வாழ்க் கை. பொன் பொருள் வீடு கிடைக்கும்.

5ல் உள்ள ராகுவை சுபர் பார்வை செய்ய, 5ம் அதிபதி வலுத்தால் நாகதோஷம் உண்டாவதில்லை.

5 ல் உள்ள கேதுவால் புத்ர நாசம் அல்லது கருச்சிதைவு ஏற்படும். ஆனால் ஜாதகருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது முதல் நல்ல யோகம் முன்னேற்றம் ஏற்படும். குரு நோக்கின் தோஷம் தீரும். நற்பலன் கிடைக்கும்.

## நாக தோஷ பரிகாரம்

ஜாதகரின் மனைவி அரச மரத்தை 12 முறையாவது சுற்றி வந்து, கன்னி பெண்களுக்கு மங்கள ஸ்நானம் செய்துவிட்டு, பழம் பாக்கு வெற்றிலை தட்சணையுடன் மனம் குளிரச் செய்தால் தோஷம் தீரும். ஆயுள் தீர்க்கமுள்ள புத்திரம் கிட்டும்.

ஜாதகத்தில் ராகு அல்லது கேது தசை அல்லது அவரது புத்தி நடந்தால் புற்று கோயில்களில் பாலூற்றி வழிபாடு செய்ய லாம். மேலும் மேற்பட்ட கிரகங்களின் மந்திரங்களை ஜெபித்து வழிபாடு செய்து வருதல் நல்வாழ்வு வாழ வழி வகுக்கும்

### ஸ்ரீராகு பகவான் வழிபாடு மந்திரம்

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

### ஸ்ரீகேது பகவான் மந்திரம்

கேதுத் திருவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத் திருவே கேண்மையாய் ரக்ஷி.

– நர்மதா மணிவண்ணன்
லட்சுமிபுரம், தேனி மாவட்டம்.



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

## ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.